REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 28 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 76 | Thursday 28, March, 2024 | 28பக்கங்கள் | 50/-

## தெற்காசியாவின் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலை; ஜனாதிபதி திறந்து வைப்பு

### இந்த ஆண்டு தொடக்கம் கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு – ஜனாதிபதி தெரிவிப்பு

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தாமல் நாட்டின் எதிர்காலம் குறித்து நம் பிக்கை வைக்க முடியாதென ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சுகாதாரத்துக் காக போதிய மூலதனச் செலவுகள் வழங்கப்படவில்லை எனவும் இந்த வருடத்தில் இருந்து கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக அதிக மூலதனச் செலவுகளை வழங்கத் திட்டமிட்டுள் ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தெற்காசிய வலயத்தின் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலை யாகக் கருதப்படும் காலி கராபிட்டி யவில் நிர்மாணிக்கப்பட்ட "ஜேர்மன் இலங்கை 08

## சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் தினேஷ் சந்திப்பு

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக் குமிடையிலான சந்திப்பு நேற்று (27) பெய்ஜிங் நகரிலுள்ள கிரேட் ஹோலில் நடைபெற்றது.

சர்வதேச விவகாரங்களில் ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலை யிடாமல் நட்புறவு, அமைதி, மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய கொள்கை களின் கீழ் தொடர்ந்து செயற்பட இரு நாடுகளுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது. இருதரப்பு உறவுகள், நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர மரியாதை மற்றும் பரஸ்பர வினைத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதை வலி யுறுத்தி, அந்தக் கொள்கையின்படி செயற்படுவது இரு நாடுகளுக்கும் சிறந்த முன்மாதிரியாக இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களை முன்வைக் கும் பட்சத்தில் உடனடியாக அதற்கு சீனாவின் ஆதரவு 08



## ‘சரசவிய’ திரைப்பட விருது விழா இன்று

### BMICH இல் கோலாகலம்

தேசிய சினிமாவின் மாபெரும் விழாவான சரசவிய சினிமா விருதுகள் வழங்கும் விழா இன்று (28) மாலை 6.00 மணி முதல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது. அறுபதாவது ஆண்டை பூர்த்தி செய்துள்ள சரசவிய திரைப்பட சஞ்சிகை 08

## O/L பரீட்சை நிறைவடைந்ததும் உடனடியாகவே A/L வகுப்புக்கள்

### மாணவர்கள் நாலு மாதங்கள் காத்திராது தொடர்ச்சியாக கல்வி வழங்கத் திட்டம்

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததும் உட னடியாகவே, மாணவர்களுக்கு உயர் கல்வி வகுப்பை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சாதாரண தர பரீட்சையில் தோற்றி யதன் பின்னர் பெறுபேறுகள் வரும் வரையான நான்கு மாத காலப்ப குதியில் அந்த மாணவர்கள் வேறு விடயங்களுக்கு உட்படுவதாக தெரி வித்துள்ள அமைச்சர், புதிய வேலைத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கை களில் ஈடுபட முடியும் என்றும் தெரி வித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

க.பொ.த. சாதாரண தர பரீட்சை யின் பெறுபேறுகள் வெளியிடப்படு வதற்கு முன்பதாக க.பொ.த. உயர் கல்விக்கான வகுப்புகளை ஆரம்பிப் பதன் மூலம் பாடசாலைகளில் உயர் கல்விக்காக தோற்றும் 02 மாணவக் குழுக்கள் ஒன்றாக இணைக்கப்படு வர்.

இது எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தாது. அதற்கான இட முகா மைத்துவமும் அதிபர்களினால் ஒழுங்கு செய்யப்படும். கல்வி முன் னேற்றம் மற்றும் மாற்றங்களை ஏற் படுத்த வேண்டியுள்ளது. அதற்காக தேவையான மாற்றங்களும் படிப்படி யாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்துக்காக முதலில் 2001 ஆம் ஆண்டில் ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகப்படுத்தியதுடன், அது தற்போது 06ஆம் வகுப்பு முதல் க.பொ.த. உயர்தரம் வரை 500 பாட சாலைகளில் நடைமுறைப்படுத்தப்ப டுகிறது.

கல்வி மறு சீரமைப்பு தொடர்பான உபகுழு கடந்த வாரம் ஜனா திபதியுடன் பேச்சுவார்த்தை 08

### தோட்டத் தொழிலாளர் சம்பள பேச்சு

## 33 வீத உயர்வுக்கு கம்பனிகள் இணக்கம் ஏற்கமுடியாதென தொழிற்சங்கங்கள் நிராகரிப்பு

“மலையக பெருந் தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கே பெருந்தோட்ட கம்பனி கள் முன்வந்துள்ளன. இதனை ஏற்கமுடியாது. 1,700 ரூபா அவசியம் என்ற நிலைப் பாட்டில் நாம் 08

## பங்களாதேஷின் 53 ஆவது சுதந்திர தினம்

பங்களாதேஷின் 53 ஆவது சுதந்திர தினம் மற்றும் தேசிய தின கொண்டாட்டம் (26) உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது. உயர்ஸ்தானிகர் தாரீக் முஹமட் ஆரிஃபுல் இஸ்லாம், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவுடன் இணைந்து கேக் வெட்டிக் கொண்டாடினார். நிகழ்வில் அமைச்சர்களான அலி சப்ரி, சுசில் பிரேமஜ யந்த, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மாணவியருக்கு Sanitary Napkins புத்தாண்டின் பின் வவுச்சர்கள்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

பாடசாலை மாணவிகளுக்கு ஆரோக்கிய துவாய்கள் (Sanitary Napkins) கொள்வனவு செய்வதற்கான வவுச் சர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள் ளார். தமிழ்,சிங்கள புத்தாண்டு பண்டிகையின் பின்னர் இந்த வவுச்சர்கள் வழங்கப்படுமென்றும் அவர் தெரி வித்தார்.

பாடசாலை மாணவிகளின் சுகாதாரப் பழக் கத்தை அதிகரிப்பதற்கும், போதுமான 08

## ஐக்கிய தேசிய கட்சியின் மே தினம் பஞ்சிகாவத்தையில்

### 50,000 ஆதரவாளர்கள் பங்கேற்பர்

கொழும்பு பஞ்சிகாவத்தை மைதானத்தில் நடைபெறு மென கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கபண்டார தெரி வித்தார். கட்சி தலைமையக மான ஸ்ரீகொத்தாவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர், இதுபற்றி தெரிவித்தார்.கட் சியின் மேதினத்தை கொண்டாடுவதற்கு விரிவான ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் ஆயிரம் பிராந்திய அமைப்பாளர்கள் 08




## கொழும்பு அழகு சாதனப்பொருட்கள் நிலையத்தில் அதிரடிச் சோதனை

### பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகள் மீப்பு

தோல் வைத்திய நிபுணர்களின் சங்கம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து செவ்வாய்க்கி ழமை (26) கொழும்பில் உள்ள பல முன்னணி அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்க ளில் சோதனைகள் 08

## 12 மாதங்களில் பொருளாதாரம் குறிப்பிட்ட அதிகரிப்பை எட்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்வரும் 12 மாதங்களில் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை ஈட்டுமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந் தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் இறுதிக் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 4.5 வீதமாக வளர்ச்சியடைந்ததாகவும் 08

## 08

### இலங்கை - சீன ஒத்துழைப்பின் கீழ் புதிய 09 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இரு பிரதமர்கள் தலைமையில் நிகழ்வு

## SLPPக்குள்ளும் ஜனாதிபதி வேட்பாளர்கள்; உரிய காலத்தில் பெயர் அறிவிக்கப்படும்

### நாமல் ராஜபக்ஷ எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பலரும் பல்வேறு கருத்துக்களை வெளி யிட்டு வரும் நிலையில், பொதுஜன பெர முனவிற்குள் ஜனாதிபதி வேட் பாளர்கள் பலர் 08

## வலகும்புர மா ஓயாவில் நீராடிய நான்கு மாணவர்கள் மூழ்கி பலி

### மற்றுமொரு மாணவன் பிரதேசவாசிகளால் மீப்பு

அலவ்வ வலகும்புர பிரதேசத்தில் மா ஓயாவில் நீராடச் சென்ற பதினொரு சிறுவர்களில் நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அனுவலகம் தெரி வித்துள்ளது. பொல்கஹவெல புனித பெர்னாட் மகா வித்தியாலயத்தில் 08

## பண்டிகைக்கால உணவுகளை பரிசோதிக்க விசேட PHI குழு

பண்டிகை காலத்தை முன்னிட்டு கடைகளை பரிசோதிப்பதற்காக நாட ளாவிய ரீதியில் 3,000 பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாக, பொது சுகாதார பரி சோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள், பண்டிகைக் காலத்திற்காக தயாரிக்கப்பட்ட 08

## கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில்

# ‘எம்.எச். ஓமார்’ விசேட கல்லீரல் சிகிச்சை நிலையம் புதிதாக திறப்பு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைப்பு

மக்களுக்கு உயர்தர சுகாதார சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்ட "எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய் சிகிச்சை நிலையம்" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் (26) மாலை வருகை தந்த ஜனாதிபதியை, வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கல்லீரல் சத்திரசிகிச்சையின் மூலம் குணமடைந்த சிறுமியொருவர் வரவேற்றது விசேட அம்சமாகும்.

இலங்கையில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் நாட்பட்ட கல்லீரல் நோயின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கல்லீரல் செயலிழப்புக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே பயனுள்ள சிகிச்சையாகும். இந்த சிக்கலான கல்லீரல் நோய்களுக்கான சிகிச்சைக்கு விசேட அறிவு மற்றும் விலையுயர்ந்த உபகரணங்கள் அவசியம்.

கல்லீரல் மாற்று சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வது ஒரு நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பின் வளர்ச்சியின் குறிகாட்டியாகும். பட்டப்பின்படிப்பு பயிற்சி மைய மாகவும் வடகொழும்பு கல்லீரல் நோய்களுக்கான மையம் செயற்ப டுவதோடு கல்லீரல் நோய்களில் உயர்தர ஆராய்ச்சியை நடத்தி இலங்கையில் கல்லீரல் புற்று நோய் சிகிச்சையின் மிகப்பெரிய தரவுத்தளத்தை பேணுகிறது.

இந்த கல்லீரல் நோய் விசேட சிகிச்சை நிலையத்தை நிர்மா ணிப்பதற்காக எம். எச். ஓமார் நிதியம் (இரண்டரை பில்லியன்) 250கோடி ரூபாய்களை நன்கொ டையாக வழங்கியுள்ளது.

இது இலங்கையின் சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகளுக்கு இலங்கையில் தொழில்முனை வோர் வழங்கிய மிகப்பெரிய நன் கொடையாகும். எம். எச். ஓமார் இந்த நாட்டில் புகழ்பெற்ற பிராண் டிக்ஸ் குழுமத்தின் ஸ்தாபகர் ஆவார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து எம். எச்.ஓமார் விசேட கல் லீரல் நோய் சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதன் வசதிகளை அவதானிக்கவும் இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப் பட்டுள்ள விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பு ஒன் றையும் இட்டார்.

அதனைத் தொடர்ந்து நடை பெற்ற வைபவத்தில் உரையாற் றிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க,

ஓமார் குடும்பத்தினர் வழங் கிய தனித்துவமான நன்கொடை மற்றும் பிராண்டிக்ஸ் வர்த்தகத் தின் ஊடாக நாட்டின் பொருளா தாரத்துக்கு ஆற்றிய பங்களிப்பை பாராட்டினார்.

கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை களுக்கு பிராந்தியத்தில் சிறந்த நாடாக இன்று இலங்கை மாறியுள் ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்த குழு நாட்டுக்கு வழங்கிய நற் பெயருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இந்நாட்டில் சுகா தாரத் துறையில் மாற்றத்தை ஏற் படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்தும் ஜனாதி பதி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

சிசு இறப்பு மற்றும் தாய் இறப்பு விகிதங்களின் அடிப்படையில் நமது நாடு புள்ளிவிபர அடிப்ப டையில் சிறந்த நிலையில் உள்ளது என்றும், கொவிட் தொற்றுநோய் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் இலங்கை வலுவாக முன்னேற முடிந்ததாக இந்நிகழ் வில் உரையாற்றிய சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் இந்த வசதி களுக்காக 2.5 பில்லியன் ரூபா பெரும் தொகையை நன்கொடை யாக வழங்கிய எம்.எச்.ஓமார் மற்றும் குடும்பத்தினருக்கு அவர் நன்றிகளை தெரிவித்தார்.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், எம். எச். ஓமாரின் பேரனும் பிராண்டிக்ஸ் குழுமத் தின் பணிப்பாளருமான ஹாசிப் ஓமார், களனிப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நிலாந்தி டி சில்வா, சுகாதார அமைச்சின் செய லாளர் பி. ஜி. மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பா ளர் வைத்தியர் சம்பத் ரணவீர, சுகாதார அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர் கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் உள் ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# டிஜிட்டல் பொருளாதார பரிவர்த்தனை, செயற்கை நுண்ணறிவுக்கான மையம்

## புதிய சட்டங்கள் இவ்வருடம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

## டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் ஜனாதிபதி

டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக் கான மையத்தை (AI) உருவாக்குவதற்கான சட்டங்கள் இவ்வருட நடுப்பகுதிக்குள் பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

துரித டிஜிட்டல் பரிவர்த்தனையின் ஊடாக எமது நாட்டின் பொருளாதாரத்தை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் பொருளாதாரமாக மாற்ற முடியுமெ னவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார். கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் (26) ஆரம்பமான டிஜிட்டல் பொது உட்கட்ட மைப்பு வசதிகள் மாநாட்டில் பிரதான உரை யாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயமும் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதி கள் மற்றும் நிர்வாகம் தொடர்பில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அறிவும் அனுபவமும் கொண்ட பல இந்திய மற்றும் இலங்கை நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர்.

புதிய சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதா ரமாக இலங்கையின் பொருளாதாரத்தை மாற்ற முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:

நாட்டின் பொருளாதார மாற்றத் திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் புதிய நிறுவன கட்டமைப்பொன்றை ஏற்படுத்த திட்டமிட் டுள்ளோம். தகவல் தொழில்நுட்ப சபை போன்ற தற்போதுள்ள கட்டமைப்புகளில் இருந்து விலகி, டிஜிட்டல் மாற்றத்திற்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண் ணறிவுக்கான மையத்தை (AI மையம்) உரு வாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2024 வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்க நட வடிக்கை எடுத்துள்ளோம்.

விவசாயத்தை நவீனமயமாக்குவது, வறுமையை நிவர்த்தி செய்வது மற்றும் கல்வி முறையை சீர்திருத்துவது போன்றவற் றில் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வச திகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத் தப்பட்டுள்ளது. வறுமையைக் குறைக்கும் தேசிய இலக்குடன் அரசாங்கம் செயற்படுகி றது. 2035 ஆம் ஆண்டளவில் இலங்கை மக் களில் வறுமை 10% ஐ தாண்டாது என்பதை உறுதிப்படுத்துவது எமது நோக்கமாகும்.

இந்த பொருளாதார நோக்கங்களை அடை வதில் வலுவான நிறுவன கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் துல்லியமான தரவுகளை சேகரிப்பது முக்கியமானது. இந்தத் தரவுகள் ஊடாக கல்வி, சுகாதாரம் மற்றும் வருமான மட்டங்கள் போன்ற பல்வேறு பரிமாணங்க ளைக் கருத்தில் கொண்டு தீர்வுகளை அளிக்க வேண்டும்.

உத்தேச முகவர் நிறுவனத்தை செயல்படுத்தும் வகையில் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் அதற் கான சட்டத்தை பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந் தியம் ஒரு பாரிய வளர்ச்சிப் பிராந் தியமாக உருவாகி வருவதால், இலங்கை போட்டிப் பொருளாதார மாக மாறுவதற்கு இந்த சட்டவாக்க மற்றும் கொள்கை கட்டமைப்பு மிகவும் முக்கியமானது.

இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாடசாலை மற்றும் உயர்கல்வி மட்டத்தில் கல்வி முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுக ளில் பாடசாலைகளுக்கு செயற்கை நுண்ணறிவை (AI) அறிமுகப்படுத்துவது பிரதான திட்டமாகும்.மேலும் ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில் அனைத்து பாடசா லையையும் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தி பல்கலைக்கழகங்கள் வரை இதனை விரிவு படுத்த எதிர்பார்க்கிறோம். இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்திய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட நாம் எதிர்பார்க்கிறோம். குறிப் பாக, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின்(IIT) கிளையை எமது நாட்டில் நிறுவுவதற்கும் அவர்களின் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி இரண்டு தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்கள் உட்பட மூன்று பல்கலைக்கழகங்களை இங்கு முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒத்துழைப்பு அவசியம். 21ஆம் நூற்றாண் டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கையை தயார்படுத்துவதில் நவீனம யமாக்கலைத் தழுவ வேண்டிய அவசரத் தேவை உருவாகியுள்ளது எனவும் ஜனாதி பதி தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ பொருத்தமான மூலோபாயங்களைப் பின் டி சில்வா,காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க, சரித ஹேரத், மொஹமட் முஸம்மில், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்மசிறி குமாரதுங்க உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தவக்கால சிந்தனை

## பெரிய வியாழன் – இராப்போசன பெருவிழா

இராவுணவு மேசையில் இயேசு தனது நெருங்கிய நண்பர்களுடன் அமர்கின்றார். இன்னும் சிறிது வேளையில் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு விடுவேன் என்பதனை அறிந்தவராய் அப்பத்தை தனது கரங்களிலெடுத்து, அதனைப்பிட்டு, ஆசீர்வதித்து 'இதை எடுத்து உண்ணுங்கள், இது எனது உடல்;' என்றார். பின்னர் அவ்வாறே கிண்ணத்தையும் எடுத்து ஆசீர்வதித்து, அவர்களுக்கு அளித்து அவர் 'இதை எடுத்துப் பருகுங்கள், இது எனது இரத்தம்' என்றார்.

இப்புனிதமும் மகிமையும் மிகுந்த தருணமதில் மாபெரும் மறைபொருளாகிய நற்கருணை உலகிற்கு அளிக்கப்பட்டது. 'நமக்கு அளிக்கப்பட்ட இத்தகைய ஆடம்பர மறைபொருளின் உன்னதத்தை நாம் அறிந்துள்ளோமா' என்று நம்மையே நாம் கேட்க வேண்டும்.

நாம் நற்கருணையினை பெறுவதன் வாயிலாக இயேசு நம்மோடு ஒன்றிக்கிறார். நற்கருணையால் நாம் அவரிடம் ஈர்க்கப்பெறவும் அவர் நம்மில் ஈர்க்கப்பெறவும் அதனூடாக அவரது தெய்வீகம் நமது மனிதத்துவத்தில் இணைகிறது.

நற்கருணை என்பது பொருள் கிடையாது மாறாக அதுவொரு ஆள் அவர் இயேசு கிறிஸ்து! அவரது உடல், இரத்தம், ஆன்மா, தெய்வீகம் ஆகும். இவ்வருளடையாளத்தை பெறுவதன் வாயிலாக கடவுளுடன் ஒன்றிப்பது நிறைவேறுகிறது.

நாம் அவரைப் பெறுவதற்கு அன்புடனும், தாழ்ச்சியுடனும் வருவோம். நாம் தாழ்ச்சியுடன் அவரது ஒளி, உண்மை, அமைதி, அன்பு ஆகியவற்றை உலகிற்கு கொண்டு வருவோம். நாம் அவரது தலைசிறந்த நன்கொடைக்காக நன்றியுடன் இருப்போம். நற்கருணை அவர் நமக்கு தருகின்ற கடவுளின் அதி உன்னத கொடையாகும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# ரமழான் சிந்தனை

## பத்ர் களம் தரும் படிப்பினைகள்

இஸ்லாத்தில் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையில் நடைபெற்ற முதலாவது போராட்டமே பத்ர் யுத்தம் ஆகும். மதீனாவுக்கு அருகிலுள்ள பத்ர் என்ற இடத்தில் இடம்பெற்றதால் இந்த யுத்தம் அப்பெயரைப் பெறுகிறது.

இஸ்லாமிய வரலாற்று ஒட்டத்தில் மகத்தான மாற்றத்தையும், புரட்சிகர மான திருப்பத்தையும் ஏற்படுத்திய இப்போரில், சத்தியத்திற்காகப் போராடியவர்கள் சிறு குழுவினராகவும் அசத்தியத்திற்காகப் போராடியவர்கள் பெருந்தொகையினராகவும் இருந்தனர்.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமழான் மாதம், பதினேழாம் நாள் நடந்த இப்போராட்டம் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக விளங்குகிறது. மக்கா குறைஷிகள் திறமை மிகு போர் வீரர்களுடனும், போர்க் குதிரை, தளபாடங்களுடனும் இருக்க, இறை விசுவாசிகள் மூன்றில் ஒரு பங்கினராகவே காணப்பட்டனர். ஆனால் இறைநம்பிக்கையாளர்கள் நோன்பு நோற்றவர்களாக இருந்தனர். அவர்களிடம் ஈமானிய பலம் மிகைத்துக் காணப்பட்டது.

இந்நிலையில் பத்ர் யுத்தம் தொடங்க முன்னரான இரவில் நபி(ஸல்) அவர்கள் உறங்காது காலை வரையிலும் பிரார்த்தனை செய்தார்கள். அப்பிரார்த்தனையில், 'இறைவா! நீ எனக்கு வாக்களித்ததை நிறைவேற்று. நீ எனக்கு வாக்களித்ததை வழங்கு! இறைவா! இஸ்லாமிய இக்கூட்டம் அழிக்கப்பட்டால் இப்பூமியில் உன்னை வணங்குபவர்கள் (இதன் பின்னர்) எவரும் இருக்க மாட்டார்கள். (ஆதாரம்: முஸ்லிம்) என்று அல்லாஹ்விடம் இறைஞ்சி பிரார்த்தனை செய்தார்கள். இதன் பயனாக அல்லாஹ்வின் அருளில் உறுதியான நம்பிக்கை வைத்த உள்ளங்கள் இறை நாட்டத்தினூடாக பத்ர் களத்தில் வெற்றிபெற்றனர். ஆகவே ரமழான் நோன்பில் நடைபெற்ற பத்ர் யுத்தம் மாபெரும் போதனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி இருக்கிறது இஸ்லாம்.இவற்றின் ஊடாகப்பயனடைவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# வருட இறுதிக்குள் தேசிய கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

## கள விஜயத்தில் அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை

வருட இறுதிக்குள் தேசிய கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். மேலும்13 வருடங்களாக பூர்த்தி செய்யப்படாமலுள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கையும் ஜனாதிபதி பார்வை யிட்டார்.

2011 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கலைக்கூடத்தின் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை.

தேசிய கலாபவனத்தை புனர்நிர்மாணப் பணியும் முடங்கியுள்ளது.

கலாபவனம் தொடர்பாக கலைஞர்கள் மற்றும் கட்டிடக்கலை நிபுணர்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை செவிமடுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, அது தொடர்பில் பொதுவான உடன்பாட்டை எட்டுமாறு வலியுறுத்தினார்.

சகல தரப்பினருடனும் இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் இவ்வருட இறுதிக்குள் கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார். தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

08

# பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு வேண்டுகோள்

கத்தோலிக்க தேவாலயங்களுக்கு வரும் அடையாளம் தெரியாத நபர்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார், பொதுமக்களை கேட்டுள்ளனர். இவ்வாறானவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் தருமாறும் பொலிஸார் பொதுமக்களை கோரியுள்ளனர்.

கிறிஸ்தவ மக்களின் விசேட தினங்களான பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்களில் நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் தற்பொழுது பல ஆராதனை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

சந்தேகத்துக்கிடமானவர்கள் தொடர்பில் அந்தந்த பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் அறிவிக்குமாறும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் பரிசோதர்கள் தமது எல்லைக்குட்பட்ட அனைத்து கத்தோலிக்க ஆலயங்களுக்கும் சென்று அங்குள்ள அருட்தந்தையர்களுடன் கலந்துரையாடி தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது

# பாராளுமன்ற கிரிக்கட் போட்டி மார்ச் 29 இல்

பாராளுமன்ற பணியாட்தொகுதியின் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் திணைக்களங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி சனச காப்புறுதி நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன் நாளை 29ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப 8.00 மணிக்கு பத்தர முல்லை ஜீ.எச்.புத்ததாச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவின் பங்குபற்றுதலின் கீழ், இந்த கிரிக்கட் சுற்றுப்போட்டி நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்ற பணியாட்தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கிய அணி என்பன, இந்தக் கிரிக்கெட் போட்டியில் பங்கெடுக்கவுள்ளன.

ஒரே நாளில் விரும்பிய வாகனம்

சொகுசு SUV வாகனம், கார், வேன், பஸ் மற்றும் ட்ரெக்டர், அறுவடை இயந்திரங்கள் உட்பட விவசாய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை குறைந்த வட்டி வீதத்தில் இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

இலகுவாக வாங்கலாம்
இலகுவாக செலுத்தலாம்

BOC லீசிங்

மேலதிக விபரங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE
www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



காகில்ஸ்
இடமிருந்து நம்பமுடியாத குறைந்த விலை

ரூ.265
வெள்ளை சீனி
1kg

ரூ.299
மைசூர் பருப்பு
1kg

ரூ.255
பொன்னி அரிசி (இறக்குமதி செய்யப்பட்ட)
1kg

ரூ.194
சிகப்பரிசி (உள்நாடு)
1kg

ஒரு கிலோ
ரூ.90 மட்டுமே

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
காய்கறி மற்றும் ஏனைய சலுகைகள் 2024 மார்ச் 31 வரை மட்டுமே.
இருப்பு உள்ளவரை மட்டுமே.
எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி விலைகள் மாற்றப்படலாம்.

Cargills FOOD HALL | Cargills XPRESS | Cargills food city ஏறி செல்லும் போது

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் பங்குனி மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 17

**குறள் தரும் சிந்தனை**



அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை.

## நாட்டின் பொருளாதாரத்தில் சாதகமான முன்னேற்றங்கள்

நாட்டின் பொருளாதார சுபீட்சத்தை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் பயனாக பொருளாதாரத்தில் சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதே அனைத்து வேலைத்திட்டங்களதும் இலக்காக உள்ளது. அதன் பயனாகவே இவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் நாட்டுக்கு பயனளிக்கத் தொடங்கியுள்ளன.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டின் தலைமையை 2022 ஆண்டின் ஜூலை மாதப் பிற் பகுதியில் ஏற்றது முதல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் பிரதிபலனாக நாடு குறுகிய காலப்பகுதிக்குள் கட்டம் கட்டமாக நம்பிக்கை தரும் வகையில் மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருகின்றது.

இதன் பயனாகவே பொருளாதார நெருக்கடி காலத்தில் நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் பாதிப்புக்களும் தாக்கங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்ததா? என்று வினவப்படும் அளவுக்கு நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது.

அதேநேரம் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களுக்கு அமைய அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டும் வருகின்றன. அதற்கான வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை, கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களை விடவும் 100 சதவீதத்திற்கும் மேல் வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது இவ்வருடம் ஜனவரி மாதம் 208,253 உல்லாசப் பயணிகளும் பெப்ரவரி மாதம் 218,350 உல்லாசப் பயணிகளும் இந்நாட்டுக்கு வந்துள்ளனர். ஆனால் கடந்த வருடம் ஒவ்வொரு மாதமும் சாதாரணமாக ஒரு இலட்சம் உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர். இதன்படி இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களிலும் உல்லாசப் பயணிகளின் வருகையில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப் பதை இந்தத் தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதேபோன்று வெளிநாடுகளில் தொழில்பு ரிவோர் அனுப்பி வைக்கும் அந்நியச் செலாவணியிலும் கடந்த வருடங்களை விடவும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அத்தோடு மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதியும் கடந்த பெப்ரவரி மாதத்தில் அதிகரித்துள்ளது.

இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பை நல்கும் முக்கிய துறைகளில் இவையும் அடங்கியுள்ளன. இத்துறைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு சாதகமான நிலைமையாகும். இதேபோன்று நாட்டின் ஏனைய துறைகளும் முன்னேற்றப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான சூழலில் இலங்கை மத்திய ஆளுநர் நந்தலால் வீரசிங்க மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் நடாத்தியுள்ள செய்தியாளர் மாநாட்டில், 'கடந்த இரண்டு மாதங்களிலும் உல்லாசப் பயணத்துறையின் ஊடாக 687 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வெளிநாடுகளில் தொழில் புரிவோர் ஊடாக 964 மில்லியன் டொலர்களும் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் பயனாக பெப்ரவரி மாத இறுதியாகும் போது மொத்த வெளிநாட்டு கையிருப்பின் பெறுமதியும் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்துள்ளது' என்றுள்ளார்.

இவ்வாறான நிலையில் நாட்டின் பணவீக்கத்தில் ஏற்பட்டுள்ள சாதக நிலைமைகளின் பின்புலத்தில் வைப்புக்கள் மற்றும் கடன்களுக்கான வட்டி வீதங்களை குறைக்கவும் மத்திய வங்கி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இது நாட்டின் அனைத்து மக்களும் பயனடையக் கூடிய வேலைத்திட்டமாக இருக்கும்.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தில் குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வாறு சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதற்கு 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதல் முன்னெடுகப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களே காரணமே அன்றி வேறில்லை. அதனால்தான் இந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில் நாடு நிலைபேறான அபிவிருத்தியை கூடியகதியில் அடைந்து கொள்ள அது பாரிய பங்களிப்பை நல்கும். நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியே மக்களின் எதிர்பார்ப்பாகும். மக்கள் வளமான பொருளாதார வாழ்வைப் பெற்றுக் கொள்ளவும் அது பக்கபலமாக அமையும் என்றால் மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# மலையக நீர்த்தேக்கங்களில் முன்னொருபோதும் இல்லாதவாறு வேகமாக தாழிறங்கும் நீர்மட்டம்!

**கடும் வரட்சியினால் மின் உற்பத்தி, நீர்விநியோகம் பாதிப்பு!**

நாட்டில் தற்போது நிலவுகின்ற வரட்சி மற்றும் அதிக வெப்பம் காரணமாக மத்திய மலைநாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகின்றது. வெப்பம் தற்போது என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதனால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாக தாழிறங்குவதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தேசிய மின் உற்பத்திக்கு பாரிய பங்களிப்பினை வழங்கி வரும் நீர்த்தேக்கங்களான மவுசாக்கலை மற்றும் காசல்ரி நீர்த்தேக்கங்களில் கடந்த காலங்களுக்கு மாறாக நாளொன்றுக்கு 3 அடி நீர்மட்டம் தாழிறங்குவதாக இந்த நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாங்கள் தொழில் செய்வது பாரிய சவாலாக இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமான மவுசாகலை நீர்தேக்கத்தில் நீர்மட்டம் இறங்கியதால், அங்கு நீரில் மூழ்கியிருந்த மஸ்கெலியா பழைய நகரம், கதிரேசன் கோயில், பள்ளிவாசல், புத்தர் பெருமான் சிலை ஆகியன

தற்போது வெளியே தென்பட ஆரம்பித்துள்ளன.

இதேநேரம் ஹட்டன், மஸ்கெலியா, நோர்வூட், கொட்டகலை உள்ளிட்ட பல பகுதிகளில் பாரிய குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஹட்டன் நகரசபை பிரதேசத்தில் குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் அதிகார சபையினால் வலியுறுத்தப்பட்டு வருவதுடன், இரண்டு நாட்களுக்கு ஒரு முறையே குடிநீர் வழங்க முடிகின்றது.

இதனால் ஹட்டன் நகரில் உள்ள பல ஹோட்டல்களில் குடிநீர் பெற்றுக் கொள்வதற்காக மேலதிகமாக பணத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாளொன்றுக்கு நீருக்காக 1800 ரூபா செலவிட்டு வாகனங்கள் ஊடாக நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். நீர் பற்றாக்குறையாக உள்ளதால் நீரை வீண்விரயமாக்காது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சூரியன் இலங்கைக்கு மேலாக உச்சம் தருவதால் உஷ்ணம் அதிகரித்துள்ளது. மலையகத்திலுள்ள காடுகளுக்கு விஷமிகள் தீவைப்பதனால் பல பிரதேசங்களில் நீரூற்றுக்கள் வற்றிப் போய் உள்ளன. அப்பிரதேசங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் நீரேந்து பிரதேசங்களில் அமைந்துள்ள வளமான வனப் பிரதேசங்கள் தீயினால் நாசமாகியுள்ளன. நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகியுள்ளன. இதனால் நீர்நிலைகள் பாரிய அபாயத்தினை சந்தித்துள்ளதாக சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த உஷ்ணம் மற்றும் வரட்சியான காலநிலை தொடருமானால் நீர் விநியோகம் பாதிக்கப்படுமெனவும், மின்சார உற்பத்தி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருக்குமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்த மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் பல வருடங்களளாக மீன்பிடியில் ஈடுபடும் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "நான் பல வருடங்களாக இந்த நீர்த்தேக்கத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுத்தான் வாழ்க்கை நடத்தி வருகிறேன். ஒவ்வொரு வருடமும் சிவனொளிபாத மலை பருவகாலத்தில் வரட்சி ஏற்பட்டு நீர்த்தேக்கத்தில் நீர் தாழிறங்குவது வழக்கம். ஆனால் இம்முறை என்றுமில்லாத வாறு நீர் தாழிறங்கி வருகிறது.

முன்னரெல்லாம் நாளொன்றுக்கு ஒரு அடி தாழ் இறங்கிய நீர் இப்போது நாள் ஒன்றுக்கு 3 அடி தாழிறங்குகிறது. இதனால் வலைகளை விரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மீனவர்களின் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

இதேவேளை நீர்ப்பாசனப் பிரதேசங்களுக்கு மழைவீழ்ச்சி கிடைக்காததன் காரணமாக சிறிய நீர்மின்னுற்பத்தி நிலையங்களும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக சிறிய நீர்மின் உற்பத்தி நிலைய பொறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**கே. சுந்தரலிங்கம்**
ஹட்டன் விசேட நிருபர்

**வேதாத்திரி மகரிஷி நினைவு தினம்:**

# வெள்ளவத்தை அறிவுத்திருக்கோயிலில் இன்று மாலை வேள்வித் தின நிகழ்வுகள்

வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாய நலனுக்காக 'மனவளக்கலை' எனும் யோகப்பயிற்சியை உலகெங்கும் பரவ செய்தார்.

'பாமர மக்களின் தத்துவஞானி' எனப் போற்றப்படும் வேதாத்திரி மகரிஷி அவர்களால் பல ஆராய்ச்சிகளின் பின்னர் 8 வயது முதல் 80 வயதுவரை எல்லோராலும் செய்யக்கூடிய எளிய பயிற்சிகளாக இந்த மனவளக்கலைப் பயிற்சிகள் அனைவருக்கும் பொதுவான தாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன.

தான் உணர்ந்த அந்த பேரானந்த நிலையை உலக வாழ்வில் சிக்கி உழன்று கொண்டிருக்கும் உலக மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அனைத்தையும் ஒரு வாழ்க்கைக் கல்வியாக, ஒரு பண்பாட்டுக்கல்வியாக ஒழுங்கமைத்துக் கொடுத்த பெருமை குரு வேதாத்திரி மகரிஷியவர்களைச் சேரும்.

தானுணர்ந்த அனைத்தையும் புத்தகங்களாக வெளியிட்டு வழங்கியதுடன் அதனை எளிய முறை பயிற்சிகளாக அவரே மக்களுக்கு கற்றும் கொடுத்தார் .

1958ஆம் ஆண்டு 'உலக சமுதாய சேவா சங்கம்' என்ற அமைப்பை நிறுவி ஒரு தனிமனிதனாக இக்கல்வியை வழங்கிய பெருமை அவரையே சேரும்.

இன்று உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மனவளக்கலை ஆசிரியர்களையும், துணைப் பேராசிரியர்களையும், பேராசிரியர்களையும் உருவாக்கி அதன்மூலம் மனவளக்கலைப் பயிற்சிகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

'உலக சமுதாய சேவா சங்கம்' எனும் அமைப்பு பத்மஸ்ரீ S.K.M.மயிலானந்தம் அவர்களின் தலைமையின் கீழ் இன்னும் பல நிர்வாகப் பொறுப்பாளர்களை உள்ளடக்கிய அமைப்பாக வெற்றிகரமாக வழிநடத்தப்படுகின்றது. இதன் செயற்பாடுகளால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்க்கைச் சிக்கல்களை சமாளித்து மன அமைதி பெற்று நோயிலிருந்து விடுபெற்று நிறைவான வாழ்வினை வாழ்கிறார்கள்.

இளைஞர்கள் தடுமாற்றமின்றி, தடம் மாற்றமின்றி சிறந்த ஞாபகசக்தியை பெற்று, தற்காலத்திலோ பிற்காலத்திலோ, தனக்கோ பிறருக்கோ, உடலுக்கோ மனதிற்கோ, எண்ணம்,சொல், செயலால் துன்பம் தராமல் வாழக்கூடிய ஒழுக்கத்தை பின்பற்றி வாழ்கிறார்கள்.

இந்தியாவில் பொள்ளாச்சிக்கு அருகில் ஆழியாறு எனுமிடத்திலே குரு வாழ்ந்த ஆச்சிரமம் 'அறிவுத்திருக் கோயில்' என்ற பெயரில் ஒரு பெரிய கல்விக் கலாசாலையாக இயங்கி வருகிறது. இதுபோன்ற அறிவுத் திருக்கோயில்கள் இந்தியா முழுவதும் அமைக்கப்பட்டு மக்களின் அறிவுப்பசிக்கு உணவளிக்கின்றன.

முதல்முதலாக 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஆர். வசந்தகுமார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மனவளக்கலை பயிற்சிகள் பின்னர் ஏ. மதுரைவீரன் அவர்களால் தலைமை ஏற்கப் பட்டு இலங்கையில் பல பகுதிகளிலும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

கொழும்பு வெள்ளவத்தையிலும் யாழ்ப்பாணத்திலும் அறிவுத் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டு அவை மூலமாகவும் மற்றும் நிலையங்கள் மூலமாகவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மதுரைவீரன், முருகானந்தவேல், குழந்தைவேல், செல்வரத்தினம், தேவதாஸ், தங்கராஜா, திருமதி ஸ்டெல்லா, வசந்தகுமார் உள்ளிட்ட இன்னும் பல நிர்வாகத் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு மிகச்சிறப்பான முறையில் இலங்கையில் பல பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.இக்கலையை எமக்கு வழங்கிய மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். இவரது சமாதி ஆழியாரிலே அமைந்துள்ளது.

இத்தகைய உன்னத பயிற்சிகளை வழங்கிய குரு வேதாத்திரி மகரிஷி அவர்களின் நினைவு நாளாகிய இன்று அவரை நினைவு கூர்ந்து வெள்ளவத்தை கொழும்பு அறிவுத்திருக்கோயிலில் மாலை 5 மணி முதல் வேள்வி தின நிகள்வுகள் நடைபெறுகின்றன. அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம்.

தொடர்புக்கு: 076612 2777, 071172 4467

# தேசிய மட்ட மாணவர் பாராளுமன்ற அமர்வில் மருதமுனை ஷம்ஸ் மாணவி பாத்திமா அப்லின்

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தரம்_13 கலைப்பிரிவில் கல்வி கற்கும் லபிறுல் வஸீல் பாத்திமா அப்லின் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற தேசிய மட்ட மாணவர் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார்.

இவர் 2023– 2024 இல் இடம்பெற்ற பாடசாலை, வலய, மாகாண மட்ட மாணவர் பாராளுமன்ற பிரதிநிதி தேர்வுகளிலும், மும்மொழி செயல்முறை வாய்மொழி பரீட்சைகளிலும், தேர்தல்களிலும் போட்டியிட்டு கல்முனை வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

மாணவர் பாராளுமன்ற தேர்தல் ஊடாக பிரதமர், பிரதி அமைச்சர் பதவிகளை தனது பாடசாலையிலும் கல்முனை கல்வி வலயத்திலும் வகித்து தற்போது தேசிய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டுள்ளார். மருதமுனையில் உள்ள 06 பாடசாலைகளிலிருந்தும் இவர் ஒருவர் மாத்திரமே தேசிய மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கல்வி வலயத்திலிருந்து தேசிய மட்ட மாணவர் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காக இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மற்றைய மாணவி கல்முனை கமு/அல்அஸ்ஹர் வித்தியாலயத்தை சேர்ந்த ஜே.ஷைனப் சேஹா என்பவராவார்.

இலங்கையின் 09 மாகாணங்களிலும் உள்ள 100 கல்வி வலயங்களில் இருந்து ஒரு வலயத்திற்கு இரு மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் வீதம் உயர் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 212 பிரதிநிதிகளை உள்வாங்கி தேசிய மாணவர் பாராளுமன்ற அமர்வு கொழும்பு பழைய பாராளுமன்றத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கடந்த 26

ஆம் திகதி நடைபெற்றது. தேசிய மட்ட மாணவர் பாராளுமன்றத்திற்கான சபாநாயகர், பிரதமர், சபை முதல்வர், குழுக்களின் தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் 25 ஆம் திகதி மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஒத்திகை அமர்வு மற்றும் தேசிய மட்ட மாணவர் பாராளுமன்ற அமர்வு, கலாசார நிகழ்வுகள், சுற்றுலா ஆகியன தங்குமிட வசதியுடன் அரச ஏற்பாட்டில் 27 ஆம் திகதி வரை கல்வி அமைச்சின் திட்டமிடலுடன் மாகாண கல்விப் பணிமனைகளின் மேற்பார்வையின் கீழ் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றன.

தேசிய மாணவர் பாராளுமன்றத்தில் கலந்து கொண்ட மாணவி பாத்திமா அப்லினுக்கு பாடசாலையின் அதிபர் எம். எம்.ஹிர்பகான் மற்றும் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதி தலைவர்கள், பாடசாலை சமூகத்தினர் உள்ளிட்டோர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இவர் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாத்திமா அப்லின் என்ற இம்மாணவி விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.வஸீல் மற்றும் எம்.எம்.எஸ்.பர்வின் ஆகியோரின் மகளும் முன்னாள் அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல். மீராமுகைதீனின் பேத்தியும், முன்னாள் அல்மினன் பாடசாலை அதிபர் மர்ஹூம் ஏ.எம்.ஏ.ஜெலீல் அவர்களின் பேத்தியுமாவார்.

**எல்.எம்.ஷினாஸ்**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# மனதை கொள்ளை கொள்ளும் மஸ்ஜிதுன் நபவி இப்தார்

மதீனாவின் ஓர் சிறப்பம்சமாக அதன் பலவருட பாரம்பரியமாக இருந்து வரும் ஓர் பழக்கவழக்கம் மஸ்ஜிதுன் நபவியில் நடைபெற்று வரும் 'ரமழானிய இப்தார்' நிகழ்வு. அப்புனித பூமியில் கல்வி கற்ற காலங்களில் இந்த இப்தார் நிகழ்வுகளில் நான் அதிகமாக கலந்து கொண்டுள்ளேன்.

இந்த இப்தார் மஸ்ஜிதுன் நபவியின் உள்ளேயும் அதன் முற்றவெளியிலும் ஆயிரக்கணக்கான நோன்பாளிகள் நோன்பு திறப்பதற்கென ரமழான் முழுவதும் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஓர் பிரமாண்ட நிகழ்வாகும்.

இதற்கான ஏற்பாடு தினமும் அஸர் தொழுகைக்குப் பின்னர் ஆரம்பமாவதோடு, மஃரிப் தொழுகைக்கான இகாமத்துக்கு முன்னர் முடிவடைந்து விடும். மஃரிப் தொழுகை ஆரம்பாகும் போது அந்த இடத்தில் இப்தார் ஒன்று நடைபெற்றதா என சந்தேகம் வருமளவு மிக வேகமாக முழு மஸ்ஜிதும் குறுகிய நேரத்தில் சுத்தப்படுத்தப்படுவது சிறப்பம்சமாகும்.

அத்தோடு ஒவ்வொரு நாளும் உலகின் நாலாபுறங்களிலிருந்தும் உம்றாவிற்காக வந்திருப்போர் மேலும் தொழில் செய்வோர், அங்கு வசிப்போர் என மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த இப்தார் மூலம் நாளாந்தம் பயனடைகின்றனர்.

பெரும்பாலும் இதற்குரிய ஏற்பாடுகளை மஸ்ஜிதுன் நபவி நிர்வாகத்தின் அனுமதியுடன் குறிப்பிட்ட சில குடும்பங்கள் வாழையடி வாழையாக செய்து வருகின்றன. அவர்களுக்கென தனியான சுப்றாக்கள் (வழமையாக அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இப்தார் இடங்கள்) இருக்கின்றன. எனினும் கடந்த சில வருடங்களாக அங்கு வசித்து வரும் பிறநாட்டவர்களும் இந்த இப்தார் ஏற்பாட்டில் ஆர்வம் காட்டி வருவதைக் காண முடிகின்றது.

இந்த இப்தார் நிகழ்வுகளை அதன் ஏற்பாட்டாளர்களும் மஸ்ஜிதுன் நபவி ஊழியர்களும் ஒன்றிணைந்து ஒழுங்குபடுத்துவார்கள். நாளாந்தம் மஸ்ஜிதுன் நபவிக்கு வருகை தரும் நோன்பாளிகளுக்கு வழங்கப்படும் இப்தார் உணவில் மிகக் கடுமையான சுகாதாரக் கட்டுப்பாடுகளை மஸ்ஜிதுன் நபவி நிர்வாகம் விதித்துள்ளது. அவர்களின் கடுமையான கண்காணிப்பின் கீழ் இந்த உணவுகள் விநியோகிக்கப்படுகின்றன. ஸம்ஸம் நீர், உயர்ரக பேரீச்சம்பழம், தயிர், பால், பணிஸ், அரேபிய கோப்பி என குறிப்பிட்ட சில உணவு வகைகள் மாத்திரமே மஸ்ஜிதுக்குள் அனுமதிக்கப்படும். அதுவும் பாதுகாப்பான முறையில் அடைக்கப்பட்ட நிலையில் மாத்திரமே நோன்பாளிகளுக்கு வழங்கப் படுகின்றன.

மக்களிடையே எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் ஒரே வரிசையில் அமர்ந்து ஒரே உணவை உட்கொள்ளும் அக்காட்சியை இஸ்லாமிய சமத்துவத்திற்கு சிறந்த தோர் உதாரணமாகக் கூறலாம்.

அதனை ஏற்பாடு செய்யும் மதீனாவாசிகள் போட்டி போட்டுக் கொண்டு இப்தாருக்கு வரும் ஒவ்வொருவரின் கரங்களையும் பற்றிக் கொண்டு, தங்களிடம் நோன்பு துறக்க வருமாறு வேண்டிக் கொள்வது தொன்றுதொட்டு மதீனாவாசிகளுக்கே உரிய ஓர் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

**ஏ.டப்ளியு.எம்.அல்தாப் (மதனி)**
விரைவுரையாளர்
தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யஹ்

# கிழக்கின் குரல்

# இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி திட்டம்

## மட்டக்களப்பில் 12 பயனாளிகளுக்கு நெசவுத்தொழில் உதவி

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினுடைய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பின் மண்முனை தென்எருவில் பற்று மற்றும் மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி நேற்று புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

நெசவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 'Threads for Hope' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் கீழ் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிலிருந்து 11 பயனாளிகளுக்கும் மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவிலிருந்து 2 பயனாளிகளுக்கும் நெசவுத்தொழில் மேம்பாட்டுக்காக 150,000 ரூபா பெறுமதியான நெசவு நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான நிகழ்வில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் அனுராதி பிரேஹரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த.நிர்மல் ராஜ், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களாகிய பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பயனாளிகளுடன் சந்தைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவில்

# சுவாமி விபுலானந்தரின் ஜனன தின நிகழ்வு

**காரைதீவு குறூப் நிருபர்**

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஜனன தின நிகழ்வு நேற்று புதன்கிழமை (27) அம்பாறையின் காரைதீவு பிரதேசத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காரைதீவு விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஆலோசகரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜாவின் தலைமையில் மணிமண்டப வளாகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

முதலில் நந்திக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து துறவற கீதம் மற்றும் சரணாகதி பாடல் இசைக்கப்பட்டன.

இதன் பின்னர் சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலைக்கு சுவாமி விபுலானந்த அடிகளாரின் பேத்தி விஜயலக்ஷ்மி புவனராஜா உள்ளிட்டோரால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அத்துடன், சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த இல்லத்தில் விசேட வழிபாடு நடைபெற்றதுடன், விபுலானந்த நர்த்தனாலய மாணவிகளின் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

முஷாரப் எம்.பியால்

# அட்டாளைச்சேனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலுக்கு நிதி ஒதுக்கீடு

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலின் புனரமைப்பு பணிக்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து சுமார் நான்கு இலட்சம் ரூபாவை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் ஒதுக்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த நிதியை முஷாரப் எம்.பி. ஒதுக்கீடு செய்துள்ளார்.

மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலின் தற்போதைய நிர்வாக சபையினர், பள்ளிவாசல் அபிவிருத்தி பணிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்ற நிலையிலேயே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் அவரது இணைப்பாளருக்கும் அட்டாளைச்சேனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

# புனரமைக்கப்பட்ட லாகுகல நுகேவெவ குளம் பாவனைக்கு!

அம்பாறையில் புனரமைக்கப்பட்ட லாகுகல நுகேவெவ குளத்தை பொதுமக்கள் பாவனைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கையளித்து வைத்துள்ளார்.

வரட்சியான காலத்தில் விவசாயிகள் இக்குளத்து நீரை பயன்படுத்தி தமது விவசாயச் செய்கையை முன்னெடுக்கும் வகையில் இக்குளம் எட்டு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் முத்துபண்டா, கடற்றொழில் மற்றும் நீரியல்வள மீன்பிடித் திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டு. இராமகிருஷ்ணமிஷன் நூற்றாண்டு முப்பெரும் விழா

**ஆரையம்பதி தினகரன், பாண்டிருப்பு தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டின் தொடக்க விழாவை சிறப்பிக்கும் வகையில் முப்பெரும் விழா எதிர்வரும் சனிக்கிழமை (30) நடைபெறவுள்ளது.

இறைபணியின் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் புளியந்தீவு வாவிக்கரை வீதி 02 இல் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு நிலையத்தில் அடிக்கல் நாட்டு விழாவும் இதனைத் தொடர்ந்து அன்றையதினம் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 5.30 மணிவரை சுவாமி விபுலானந்தர் மணி மண்டபத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. விவேகானந்தர் மனிதவள மேம்பாட்டு நிலையத்தில் கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் பின்னர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (31) கல்லடிப்பாலத் தடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பீடம் அடங்கலாக 25.05 அடி நீளமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச்சிலை திரைநீக்கம் செய்து வைக்கப்படுவதுடன், பொது விழாவும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்தியா வேலூர் மாவட்ட உலகளாவிய இராமகிருஷ்ணமிஷன் மற்றும் மடங்கள் துணைச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

# 'வாய் புற்றுநோயை தடுப்போம்' திருகோணமலையில் கருத்தரங்கு

**(அன்புவழிபுரம் தினகரன் நிருபர், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)**



திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகம் மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிராந்திய பற்சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் 'வாய் புற்றுநோயை தடுப்போம்' என்ற கருப்பொருளின் கீழ் கருத்தரங்கு மற்றும் நடமாடும் சிகிச்சை திருகோணமலையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

திருகோணமலை நகராட்சிமன்றத்தின் வேலைத்தளப்பகுதி மற்றும் சுகாதாரப்பிரிவு ஊழியர்களை இலக்காகக் கொண்டு இவை நடத்தப்பட்டன.

திருகோணமலை நகராட்சிமன்ற பொதுநூலகத்தின் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன் தலைமையில் கருத்தரங்கு மற்றும் நடமாடும் சேவை நடைபெற்றன. இதன்போது சமூக பல் வைத்திய நிபுணர் சசிதரன், திருகோணமலை பிராந்திய பல் வைத்திய நிபுணர் உதயலக்ஷ்மி சூரியகுமார், நடமாடும் பற்சிகிச்சை நிபுணர் கியாஸ் ஆகியோர் வாய் புற்றுநோய் தொடர்பாகவும் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

ஐ.தே.கவின்

# மருதமுனை அமைப்பாளராக டிலிப் நௌசாத் நியமனம்

**கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**

ஐக்கிய தேசியக் கட்சியின் மருதமுனை 4ஆம், 5ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக டிலிப் நௌசாத் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.க. கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவால் தெரிவு செய்யப்பட்டு, அவரது கையொப்பமிடப்பட்ட நியமனக் கடிதத்தை முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகேயிடமிருந்து இவர் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளரான டிலிப் நௌசாத், பொது அமைப்புகளினூடாக பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர், கல்முனை மாநகர சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகின்றார்.

# மூதூரில் இப்தார்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் டயமன் விசேட பாடசாலையின் 8ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரமழான் இப்தார் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை (29) அப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் நலிவுற்ற மாணவர்களின் கல்வி நலன் கருதி இப் பாடசாலை இயங்கி வருகின்றது. மூதூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் டயமன் விசேட பாடசாலை அதிபருமான என்.பாத்திமா அகீதா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# சம்மாந்துறை விவசாய கால்நடை அபிவிருத்தி கூட்டுறவு சங்க இப்தார்

**கல்முனை விசேட, திராய்க்கேணி தினகரன், சாய்ந்தமருது விசேட, பாலமுனை விசேட நிருபர்கள்**

மட்டுப்படுத்தப்பட்ட சம்மாந்துறை ஒருங்கிணைந்த விவசாய கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (26) வளத்தாப்பிட்டியில் அமைந்துள்ள அச்சங்க வளாகத்தில் நடைபெற்றது.

மேற்படி சங்கத் தலைவர் ஏ.முகைதீன்பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பரீட், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எஸ். ஈஸ்வானா, எஸ்.ஜாபீர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சங்க அங்கத்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கல்முனையில் வீதியோர நடைபாதை வியாபாரங்களை தடைசெய்ய கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை பிரதேசத்தில் வீதியோரங்களிலுள்ள நடைபாதை வியாபாரங்களை தடை செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் பிரதேசங்களிலுள்ள பிரதான வீதியோரங்களில் வடிகான்களுக்கு அருகிலும் சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் முறையில் உணவுப் பண்டங்களான மீன், மரக்கறிகள், பழவகைகள் போன்றவை விற்பனை செய்யப்படுவதாகவும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரச் சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளை மீறி உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தாம் போக்குவரத்து செய்ய முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், வீதி விபத்துகளும் அதிகரிப்பதாகவும், அம்மக்கள் தெரிவிக்கின்றனர். வடிகானுக்கு இடப்பட்டுள்ள பாதுகாப்பு மூடிக்கு மேல் உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த உணவுப் பொருட்களில் ஈ பரவுவதாகவும், அம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதாரப் பகுதியினர், பொலிஸார் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கவனமெடுத்து நடைபாதை வியாபாரத்தை தடை செய்யுமாறும், அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கூட்டம்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர பரீட்சையில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான கூட்டமொன்று அண்மையில் அப்பாடசாலையில் நடைபெற்றது.

மாணவர்களின் பெற்றோரை முன்னிலைப்படுத்தி இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதுடன், இதில் பெற்றோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த முறையில் அடைவு மட்டத்தை அதிகரிப்பது தொடர்பாக விரிவாக கலாந்தாலோசிக்கப்பட்டது.

பிச் தரப்படுத்தல் A (LKA)

# மக்கள் வங்கி

## நிதிக் கூற்றுக்கள்

### வருமானக் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2023 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2022 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | மாற்றம் % | 2023 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2022 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | மாற்றம் % |
| **மொத்த வருமானம்** | **422,242,143** | **357,228,609** | **18.2** | **454,512,039** | **391,204,198** | **16.2** |
| வட்டி வருமானம் | 394,794,898 | 321,935,983 | 22.6 | 424,517,915 | 351,386,736 | 20.8 |
| வட்டிச் செலவினங்கள் | (340,473,452) | (246,177,918) | 38.3 | (356,735,043) | (260,351,661) | 37.0 |
| **தேறிய வட்டி வருமானம்** | **54,321,446** | **75,758,065** | (28.3) | **67,782,872** | **91,035,075** | (25.5) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 13,806,168 | 16,397,745 | (15.8) | 14,822,549 | 17,213,747 | (13.9) |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (964,366) | (828,675) | 16.4 | (964,366) | (828,675) | 16.4 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **12,841,802** | **15,569,070** | (17.5) | **13,858,183** | **16,385,072** | (15.4) |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/நட்டம் | 9,430,542 | 17,026,226 | (44.6) | 9,543,338 | 17,019,836 | (43.9) |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 4,210,535 | 1,868,655 | 125.3 | 5,628,237 | 5,583,879 | 0.8 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **80,804,325** | **110,222,016** | **(26.7)** | **96,812,630** | **130,023,862** | **(25.5)** |
| பெறுமதி குறைப்பு கட்டணங்கள் | (7,437,572) | (33,346,451) | (77.7) | (6,075,564) | (34,352,837) | (82.3) |
| வாடிக்கையாளர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | (5,474,332) | (28,366,700) | | (3,858,532) | (29,374,441) | |
| ஏனைய நிதி சொத்துக்கள் | (1,963,240) | (4,979,751) | | (1,963,240) | (4,979,751) | |
| ஏனையவை | - | - | | (253,792) | 1,355 | |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **73,366,753** | **76,875,565** | **(4.6)** | **90,737,066** | **95,671,025** | **(5.2)** |
| தனிப்பட்ட செலவினங்கள் | (24,493,737) | (26,602,748) | (7.9) | (30,216,333) | (32,200,568) | (6.2) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (4,453,850) | (4,705,872) | (5.4) | (5,073,292) | (5,366,761) | (5.5) |
| ஏனைய செலவினங்கள் | (21,755,638) | (16,032,915) | 35.7 | (26,933,282) | (21,421,022) | 25.7 |
| **நிதிச்சேவை மீதான வரிக்கு முன் செயற்பாட்டு இலாபம்** | **22,663,528** | **29,534,030** | **(23.3)** | **28,514,159** | **36,682,674** | **(22.3)** |
| நிதிச்சேவை மீதான வரி | (7,318,088) | (8,195,633) | (10.7) | (9,243,859) | (9,992,022) | (7.5) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **15,345,440** | **21,338,397** | (28.1) | **19,270,300** | **26,690,652** | (27.8) |
| வருமான வரிச் செலவினங்கள் | (5,262,634) | (4,146,339) | 26.9 | (7,884,639) | (6,165,213) | 27.9 |
| **வருடத்திற்கான இலாபம்** | **10,082,806** | **17,192,058** | (41.4) | **11,385,661** | **20,525,439** | (44.5) |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | | | |
| வங்கியின் உரிமையாளர்களுக்கு | 10,082,806 | 17,192,058 | (41.4) | 10,513,288 | 19,571,989 | (46.3) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | | 872,373 | 953,450 | (8.5) |
| **இலாபத்தின் மீதான பங்கு ஒன்றிற்கான வருவாய்** | **10,082,806** | **17,192,058** | (41.4) | **11,385,661** | **20,525,439** | (44.5) |
| சாதாரண பங்கிற்கான அடிப்படை இலாபம் (ரூபா) | 10,083 | 17,192 | (41.4) | 10,513 | 19,572 | (46.3) |
| சாதாரண பங்கிற்கான குன்றிய இலாபம் (ரூபா) | 41 | 70 | (41.4) | 43 | 80 | (46.3) |

### அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2023 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2022 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2023 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2022 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது |
| **வருடத்திற்கான இலாபம்** | **10,082,806** | **17,192,058** | **11,385,661** | **20,525,439** |
| **ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாதவை** | | | | |
| ஏனைய பூரண வருமானத்தின் ஊடான உரிமை முதல் கருவிகளின் நியாய விலையில் தேறிய இலாபம்/நட்டம் | 232,367 | 52,869 | 278,570 | (121,202) |
| வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான தேறிய உண்மை வருமானம் மற்றும் நட்டம் | 1,447,423 | (3,304,393) | 1,441,157 | (3,177,074) |
| வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்கள் மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | (434,227) | 991,318 | (433,438) | 953,496 |
| காணி மற்றும் கட்டிட மீள் மதிப்பீட்டு மிகை மூலமான வருமானம் | 4,817,014 | 3,507,183 | 5,472,322 | 4,379,820 |
| காணி மற்றும் கட்டிட மீள்மதிப்பீடு மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | (1,445,104) | (1,052,155) | (1,641,696) | (1,313,946) |
| வருமான வரி மாற்றத்திலான ஆராய்ச்சி மீதி மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | - | (2,056,688) | - | (2,056,688) |
| **ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுபவை** | | | | |
ஆனால் நான்கு பேர் ஏற்கனவே இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த மாணவர்களின் பிரேத பரிசோதனை இன்று பொல்கஹவெல வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது தலைமை பொலிஸ் பரிசோதகர் ஜ.எச்.டி.பண்டாரவின் பணிப்புரையின் பேரில் அலவ்வ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

# ஆயித்தியமலையில் சத்துமா உற்பத்தி நிலையம் திறப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பின் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆயத்தியமலை பிரதேசத்தில் 80 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்துமா உற்பத்தி நிலையம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பெண்களின் நிலைபேறான அபிவிருத்திக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக நியூஸிலாந்து வெளிநாட்டு அமைச்சின் நிதி உதவியின் கீழ் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதனுடன் இணைந்ததாக பேக்கரியொன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் நமசிவாயம் சத்யானந்தி தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டு இந்த நிலையங்களை திறந்து வைத்துள்ளார். அதன் செயற்பாடுகளையும் அரசாங்க அதிபர் பார்வையிட்டுள்ளார்.

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் இப்தார்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இப்தார்' நிகழ்வு அக்கரைப்பற்று கடற்கரையோரமாக அமைந்துள்ள கார்டன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகள் மூவருக்கு புனித திருக்குர்ஆன் பிரதிகள் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஸ்ஷேய்க் ரீ.எம்.அன்சாரால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, காசாவில் இடம் பெற்று வரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு நிதி சேகரிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஸ்ஷேய்க் ரீ.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வீ.ஜெகதீசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எம். கலாமுல்லாஹ் (ரசாதி) வின் சிறப்பு மார்க்க சொற்பொழிவு இடம்பெற்றது.

# கல்முனை உவெஸ்லி பாடசாலைக்கு Micro Motor உபகரணம் வழங்கல்

**பாலமுனை விசேட நிருபர்**

பாடசாலைகளில் இயங்கிவரும் பற்சிகிச்சை நிலையங்களினுடைய சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை உவெஸ்லி பாடசாலையின் பற்சிகிச்சை நிலையத்துக்கு Micro Motor உபகரணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினுடைய குடும்ப சுகாதாரப் பணியகத்தால் இந்த உபகரணம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, கல்முனை உவெஸ்லி பாடசாலையிடம் இந்த உபகரணம் கடந்த திங்கட்கிழமை (25) கையளித்து வைக்கப்பட்டது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி என்.ரமேஷிடம் அப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீன் இந்த உபகரணத்தை கையளித்தார்.

உலக வாய் சுகாதார தினத்தையிட்டு சுகாதார அமைச்சினுடைய குடும்ப சுகாதாரப் பணியகத்தால், பாடசாலைகளிலுள்ள பற்சிகிச்சை நிலையங்களுக்கு Micro Motor உபகரணம் வழங்கப்படுவதுடன், 20 பாடசாலைகளின் பற்சிகிச்சை நிலையங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# முகாமையாளராக பதவி உயர்வு

வீடமைப்பு அதிகார சபையில் பணி புரியும் ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ.ஸமத் சிரேஷ்ட முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வி மற்றும் உயர் கல்வியை தெமட்டகொடை விபுலானந்த வித்தியாலயத்திலும் கல்முனை சாஹிரா கல்லூரியிலும் கற்றுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான இவர், சாய்ந்தமருதை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டுள்ளார்.

வீடமைப்பு அதிகார சபையில் பதவி பெற முன்னர், கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரியில் இவர் மூன்று வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

பேருவளை இக்ராஃ தொழில் நுட்பக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் எம்.எச்.ஏ.ஸமத் மற்றும் ஹவ்வா உம்மா தம்பதியினரின் மூன்றாவது புதல்வரான இவர், தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் சிரேஷ்ட பிரதேச ஊடகவியலாளருமாவர்.

# காத்தான்குடி மீடியா போரத்தின் இப்தார் நிகழ்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி மீடியா போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை காத்தான்குடி கடாபி ரெஸ்ட் இன் விடுதியில் நடைபெற்றது.

இப்தார் நிகழ்வில் காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பை தளமாகக் கொண்டியங்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இன நல்லுறவு, ஊடகவியலாளர்களுக்கு இடையோன புரிந்துணர்வை வலுப்படுத்தும் நோக்கில் மேற்படி இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூதூர் அல் ஹிலால் மத்திய கல்லூரியில் வைர விழா

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியின் 60ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு வெகு விரைவில் வைர விழா கொண்டாடப்படவுள்ளது.

வைர விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்படி கல்லூரி அதிபர் தலைமையில் வைர விழா ஏற்பாட்டுக் குழுவினர் தற்போது முன்னெடுத்து வருகின்றனர்.

மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரியும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், சமூகப் பெரியார்கள் உள்ளிட்ட பலர் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

## 17 நாட்களின் பின்

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை பணிகள் நேற்று வழமைக்கு திரும்பின

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய பாடசாலை மாணவர் ஒருவருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனத்தை தொடர்ந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பால் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருந்த வைத்திய சேவைகள் 17 நாட்களின் பின்னர் மீண்டும் நேற்று வழமைக்கு திரும்பியுள்ளன.

இதனை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலாராணி இஸ்ஷதீன் அறிவித்தார்.

திருக்கோவிலில் மரதன் ஓடிய மாணவர் சுகயீனம் காரணமாக சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததை தொடர்ந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், கடந்த 11ஆம் திகதி முதல் அவ்வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பால் வைத்திய சேவைகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இது தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாக தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்தைகள் மற்றும் பொலிஸாரின் நீதியான நடவடிக்கைகள் காரணமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

இதன் பின்னர் வைத்தியசாலையின் அவரச சிகிச்சை பிரிவு நேற்று வழமைக்கு திரும்பியது. இது தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வ கடிதமும் வழங்கப்பட்டது.

# சவூதி பல்கலைக்கழக டிஜிட்டல் அறிவை நாம் பெற்றுக்கொள்ளலாம்

## புனித உம்ரா யாத்திரை மேற்கொண்ட தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் ரமீஸ் அபூபக்கரின் பயண அனுபவம்

சவூதி அரேபிய பல்கலைக்கழகங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பம் மிகவும் உன்னதமான இடத்தில் உயர்ந்து நிற்கின்றது. இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கிடையிலான நல்லுறவு எந்தளவுக்கு வலுப்பெறுகின்றதோ, அந்தளவுக்கு சவூதி அரேபிய பல்கலைக்கழகங்களிலுள்ள டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப அறிவையும் வளத்தையும் பெற்றுக்கொள்ளலாமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் இளம் துடிப்புடன் ஆற்றல், ஆளுமைமிக்க ஒருவர். தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த ஒரு மகான். அதன் பேற்றைத்தான் அனுபவிப்பதுடன் நின்றுவிடாது, அதனை தன் பணிகளிலும் வளர்த்து கையளிப்பவராக உள்ளார். இலங்கையில் இளம் வயதில் உபவேந்தரான அவர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை தோற்றுவிப்பதில் மிகுந்த முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட உபவேந்தர் ரமீஸ் அபூபக்கரின் பணியை பெருமைப்படுத்தும் வகையில் சவூதி அரசாங்கம், சவூதி மன்னரின் விசேட விருந்தினராக புனித உம்ரா யாத்திரையைநிறைவேற்ற ஒரு முக்கியமான வாய்ப்பு அவருக்கு வழங்கியதுடன், அப்பயணம் தொடர்பாக தினகரன் பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வி வருமாறு:

**இந்நாட்களில் நீங்கள் சவூதி மன்னரின் விருந்தினராக உம்ரா யாத்திரையை நிறைவேற்ற சென்றதாக ஊடகங்கள் வாயிலாக பேசப்படுகிறது. இவ்வங்கையிலிருந்து அங்கு விஜயம் செய்த குழுவினரில் ஒருவரென்ற வகையில் அவ்விஜயம் தொடர்பாக கூற முடியுமா?**

உண்மையிலேயே கடந்த வருடம் சவூதி மன்னரின் விருந்தினர்களாக புனித ஹஜ் யாத்திரை செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனாலும் துரதிருஷ்டவசமாக செல்லக் கிடைக்கவில்லை. அதனைத் தொடர்ந்து சமீபத்தில் புனித உம்ரா யாத்திரையை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. சவூதி அரேபிய மன்னர், உலகின் சகல நாடுகளிலும் வாழும் துறைசார்ந்த ஆளுமைகளை தம் நாட்டுக்கு விருந்தினர்களாக அழைத்து, புனித உம்ரா யாத்திரை மேற்கொள்கின்ற செயற்றிட்டத்தின் கீழ் உலகளாவிய ரீதியில் 1,000 பேர் கொண்ட யாத்திரிகர்களுக்கு வழங்கப்பட்ட நான்காவது குழுவில் 16 நாடுகளை சேர்ந்த 250 யாத்திரிகர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இதன்போது இலங்கையிலிருந்து எமது சமூகத்திலுள்ள 10 பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்ட போது, அப்பாக்கியம் எனக்கும் கிடைத்தது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இப்பயண ஏற்பாடானது, சவூதி அரேபிய உயர்ஸ்தானிகர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியின் வழிகாட்டலில் சவூதி அரேபிய உயர்ஸ்தானிகராலயம் சிறப்பாக செய்தது.

இப்பயணத்தில் உலமாக்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள், ஊடகவியாலளர்கள் கொண்ட குழுவினர் 06.03.2024 அன்று மதீனா நோக்கி புறப்பட்டோம். மன்னரின் விருந்தினராக சென்றமையால் அங்குள்ள அமைச்சின் அதிகாரிகள் எங்களை வரவேற்று அழைத்து செல்வதற்காக மதீனா விமான நிலையத்துக்கு வருகை தந்தனர். அங்கிருந்து மதீனாவிலுள்ள கொரோன் பிளாஷா என்ற நட்சத்திர ஹோட்டலுக்கு தங்க அழைத்துச் சென்றனர். அது மதீனா பள்ளிவாசலுக்கு பக்கத்திலுள்ள ஹோட்டலாகும். அங்கு 5 நாட்கள் தங்கியிருந்தோம். அங்கு இறை வணக்க வழிபாடுகளை செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்தது. மதீனா பள்ளிவாசலுக்கு பக்கத்தில் ஒரு நூதனசாலை அமைந்திருந்தது. அதில் நபி நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கக்கூடிய காட்சிகள், சஹாபாக்களின் வரலாறு, மக்கா மதீனா, இஸ்லாமிய தோற்றம் பெற்ற வரலாறுகள் ஆகிய அனைத்து வகையான விடயங்களையும் இந்நூதனசாலையில் அறிந்து கொள்ளலாம். இறுவட்டுகளில் எல்லாவற்றையும் பதிவு செய்து வைத்திருக்கின்றனர். இவற்றை பொதுமக்கள் பார்ப்பதென்றால் சவூதி அரேபிய நாணயப்படி 40, 50 ரியாழ் கட்டணமாக செலுத்த வேண்டும். நாம் இவற்றை இலவமாக பார்வையிட்டோம். மிகவும் பிரமிப்பதானதாக இருந்தது.

**அங்கு உங்களுக்கு மனங்கவர்ந்த விடயங்களை கூற முடியுமா?**

அங்கு அமையப்பெற்றுள்ள அரும்காட்சியசாலைகள், நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி திறன்பட செய்யப்பட்டுள்ளனர். ஹிராக்குகையினை எடுத்துக்கொண்டால் ஹிராக்குகை பார்த்து பரவசமடையுமளவுக்கு செய்யப்பட்டுள்ளன. அது வரலாறு பற்றியும் அது பற்றிய விளக்கங்களையும் தெளிவாக அறிந்துகொள்ளலாம். தகவல் தொழில்நுட்பத்தை நல்ல முறையில் அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். விதந்து பாராட்டுமளவுக்கு அவர்களுடைய தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. இத்தகைய தகவல் தொழில்நுட்ப அறிவுவை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை எமது நாடும் மேற்கொள்ள வேண்டும். அதற்காக இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவு வலுப்படுத்தப்பட வேண்டுமென்பது எமது பேரவா. சமூக, பொருளாதார, கல்வி ரீதியிலான விடயங்களில் இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவை கட்டியெழுப்பினால் சவூதி அரசாங்கத்தின் மூலம் எமது நாட்டுக்கு மென்மேலும் பல உதவிகளும் ஆதரவும் கிடைக்கும்.

**கல்வி ரீதியாக சவூதி அரசாங்கம் இவங்கைக்கு எத்தகைய பங்களிப்புகளை செய்கின்றன. அவை பற்றி கூற முடியுமா?**

ஏற்கெனவே சவூதி அரசாங்கம், சில பல்கலைக்கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் உதவிகள் புரிந்துள்ளன. (வயம்ப) வடமேல் மாகாண பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடத்துக்கான கட்டடத்தை நிர்மாணித்து கொடுத்துள்ளன. இவை போன்று பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கும் அவர்களுடைய தேவையை கருத்திற்கொண்டு பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றனர். கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கும் சவூதியின் பங்களிப்புகள் பாரியளவில் கிடைத்துள்ளன. சுகாதாரம், கல்வி போன்ற பல்வேறு துறைசார்ந்த விடயங்களுக்கென அவர்களுடைய பங்களிப்பு உலகமெங்கும் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிப்பதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். ஏற்கெனவே அதற்கான நிதி உதவிகளை செய்யுமாறு இலங்கையிலுள்ள சவூதி அரேபியா தூதுவரிடத்தில் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை அமைப்பதற்கான திட்டத்தை தயாரித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சட்ட ரீதியாக அமுல்படுத்தி செயற்படுத்துவற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அனுப் பியுள்ளோம். அதேவேளை இந்த மருத்துவபீடம் அமைப்பதற்கு பெரிய நிதி உதவி அவசியமாகும். அதற்கான ஆய்வுகூடங்கள், ஆளணிகள், பௌதீக வளங்கள் தேவை. எனவே இவற்றை நிர்மாணிப்பதற்காக நிதி உதவியை பெற்றுக் கொள்ளும் வகையில் சவூதி தூதுவராலயத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். இவை குறித்து கவனத்தில் கொள்வார்களென நாம் முழுமையான நம்பிக்கையுடன் உள்ளோம். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அரபு இஸ்லாமிய நாகரீகத்துக்கான தனியான பீடம் இருக்கின்றது. இப்பீடத்திலுள்ள பாடவிதானம், இப்பீடத்திலுள்ள அகவய புறவய அபிவிருத்திகளை செய்வதற்கும் பாட விதானத்தை செம்மைப்படுத்தி வலுப்படுத்துவதற்கும் சவூதியிலுள்ள மதீனா மக்கா உம்முல் குரா பல்கலைக்கழகங்களிலுள்ள கல்விசார் விடயங்களை பாரிமாறவும் வளவாளர்களை பரிமாறவும் எதிர்காலத்தில் சவூதி அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளோம்.

மதீனா பல்கலைக்கழகத்தில் 140 க்கும் மேற்பட்ட இலங்கை பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். சில பிள்ளைகள் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர். சில பிள்ளைகள் பட்டப் பின்படிப்பை மேற்கொள்கின்றனர். தத்துவமாணி, கலாநிதி பட்டங்களை படிக்கின்றனர். ஒவ்வொரு துறைகளில் கல்வி பயிலுகின்றனர். ஷரிஆ ஹதீஸ் கலை போன்ற பிரிவுகளில் சிறப்பு துறைகளில் கல்வி கற்கின்றனர். ஒருவர் பொறியியல் துறையில் கல்வி கற்கிறார். அவர் சாய்ந்தமருதை சேர்ந்தவர். அது எமக்கு பெருமையாக இருந்தது. அப்பல்கலைக்கழகம் சென்ற வேளையில் பல மாணவர்களை சந்தித்தோம். அவர்கள் அங்கு கற்பதற்கென 900 ரியாழ் நிதி உதவியும் வழங்கப்படுகின்றது. அவர்கள் அங்கு மிகவும் சந்தோசமாக கல்வி கற்கின்றனர்.

**உங்கள் பல்கலைக்கழகத்தையும் மதீனா பல்கலைக்கழகத்தையும் ஒப்பிட்டு ரீதியாக பார்க்கின்ற போது அதில் காணப்படும் ஒற்றுமைகள், வித்தியாசங்கள் யாவை?**

அபிவிருத்தியடைந்த நாடு. பணம் வசதியுள்ள நாடு. அங்குள்ள மாணவர்களின் தொகை 30,000 பேர் இருக்கலாம். எமது பல்கலைக்கழகத்தில் 8,000 பேரே இருக்கின்றனர். நிறைய விடயங்கள் டிஜிட்டல் முறைக்கு உட்படுத்தியிருக்கின்றனர். புத்தகம் கொடுங்கல் வாங்கல் முதல் சகல விடயங்களும் டிஜிட்டல் முறைக்கு உட்படுத் தப்பட்டுள்ளது.

பிள்ளைகள் பாடங்களை கற்றல் பரீட்சைக்கு தோற்றல் அனைத்தும் டிஜிட்டல் மயமே. நாம் அவற்றை செய்யவில்லை. அதற்கு நிதி உதவி போதாமையுள்ளன. நாமும் டிஜிட்டல் முறையினை மேற்கொண்டுள்ளோம். அவை முழுமையான அளவுக்கு அல்ல. ஒரு கால்வாசி இருக்கும். சில சில பிரிவுகளில் செய்துள்ளோம். அவ்வாறு முழுமையாக செய்வதென்றால் பெரியளவில் நிதி வசதிகள் தேவையாகும்.

அந்நாட்டில் பொருளாதார வளம் அதிகமாக இருப்பதால் பல்கலைக்கழகங்களை திறன்மிக்கதாக முன்னெடுத்துச் செல்லுகின்றனர். உயர்ந்த பல்கலைக்கழகமாக பிரகாசிக்கின்றது. மதீனா பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்ற வர்களில் 80 விகிதமான மாணவர்கள் வெளி நாடுகளை சேர்ந்தவர்கள். உள்நாட்டு மாணவர்கள் 20 விகிதமானவர்களுக்கும் குறையத்தான் இருக்கின்றார்கள்.

**இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் இறுதியாக என்ன கூறிக்கொள்ள விரும்புகின்றீர்கள்?**

கண்ணியமான மனிதர்கள். எங்களை எந்தக் குறையுமில்லாமல் பராமரித்தனர். விருந்தினர்களை கவனிப்பதை போன்றுதான் அரச விருந்தினர்களை கவனித்தனர்.

இந்த உம்ரா யாத்திரைக்காக பங்களிப்பு நல்கிய இரண்டு புனித மகுதிகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சௌத் மற்றும் சவூதி அரேபியாவின் இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சௌத் ஆகியோர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், எங்களை பராமரிப்பதில் கடமைகளில் ஈடுபட்ட அராபியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தந்த கொழும்பு சவூதி அரேபியா தூதரகத்தின் தூதுவர் ஓ.எல்.அமீர் அஜ்வத்துக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் எமது உள்ளார்ந்த நன்றி தெரிவிக்கின்றோம்.

நேர்காணல்:
இப்னு அம்மார்

# ஜெனரல் சவேந்திர சில்வா கென்யாவுக்கு விஜயம்

கென்யாவின் பாதுகாப்புப்படை ஆளணி பிரதானி ஜெனரல் பிரான்சிஸ் ஒமொண்டி ஒகொல்லாவின் (Francis Omondi Ogolla) அழைப்பையேற்று இந்நாட்டு பாதுகாப்பு படைத் தலைமைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கென்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய, இலங்கை மற்றும் ஆபிரிக்க பிராந்திய நாடுகளுக்கு இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இவரது விஜயத்தின் நோக்கமாக அமைந்துள்ளதாக, பாதுகாப்பு படைத் தலைமையக பிரதானி அலுவலகத்தின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்நிலையில் கென்யாவை சென்றடைந்த ஜெனரல் சவேந்திர சில்வாவை அந்நாட்டு ஜெனரல் பிரான்சிஸ் ஒமொண்டி ஒகொல்லா மற்றும் விமானப்படைத் தளபதி ஆகியோர் வரவேற்றதுடன், ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பூரண இராணுவ மரியாதையும் வழங்கினர். இந்நிகழ்வின் போது கென்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனநாதனும் கலந்து கொண்டார்.

ஜெனரல் சவேந்திர சில்வாவின் கென்யாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு வலுவான அடித்தளமாக அமையும் அதேவேளை, இலங்கை மற்றும் கென்யாவுக்கு இடையில் பரஸ்பர நட்புறவு மற்றும் கௌரவத்தையும் வெளிப்படுத்துகின்றது.

# பக்கீர் ஜமால்தீன் பாவாவை பரிவோடு நினைவு கூர்வோம்!

கிழக்கிலங்கை மண்ணின் சொத்து
கீர்த்தி மிகு முகைதீன் பாவா
இவர் வித்து
அழகான குரல் கொண்ட முத்து
ஆமாம் ஓர் ஆன்மீகச் சத்து
இறை நேசர்மார் தன்னை
என்றென்றும்
இதயத்தில் வைத்துக் கொண்டாடி
மறையோடு முறையாக ஒன்றாகி
மறைந்தார்
எம். ஜமாலுத்தீன் பாவாவும்
அல்லாஹ்வின் நேசர்கள் வாழ்கின்ற
அளுப்பத்தை ஜெய்லானி கதிர்காம்
ஆண்டாண்டாய் தரிசித்து
பிரார்த்திப்பார்
அய்யாமுல் ஜும்ஆவில் றாத்திப்பார்
சுய மெட்டில் பல பாடல் உருவாக்கி
சுகமான ராகத்தில் இசையாக்கி
சபை எங்கும் குரல் தன்னை
அரங்கேற்றி
சன்மார்க்க ஞானத்தின் வழி போனார்
வருடாந்தம் றமழானும் வரும்போது
வருவார் எம் கண் முன்னே
ஜமால் பாவா
சஹர்வேளை றபான்கொட்டி
இசை பாடும்
சாமர்த்தியம் மக்களின்
துயில் போக்கும்
நாமீதில் இருந்ததனால்
இசை ஈர்ப்பு
நாடெல்லாம் இவருக்கு
வரவேற்பு
வானொலி தொலைக்காட்சி
கை கோர்த்து
வழங்கியது நேயருக்கு
பல பாட்டு
பல திசையும் பரந்தோடும்
கலை ஆறு
பாடியுள்ளார்
இதுவரையில் பலநூறு
பக்கீராய் பிறந்தது பெரும் பேறு
பலரும் அறிவர் அவர் பெறுபேறு
பண்பாடு ஒழுக்கங்கள் தனை கற்றார்
பட்டங்கள் பாராட்டு பல பெற்றார்
அல்லாஹ்வை தவிர வேறு
பயமற்றார்
அழகாக வாழ்ந்துவிட்டு
விடை பெற்றார்
ஆரம்பப் பட்டம் இசை முரசு
அடுத்தாற் போல் அரச கலாபூஷணம்
இன்னும் தான் பல்வேறு
இடையிடையே
ஏராள வாழ்த்துக்கு உரித்தாளி
சீனடியும் சிலம்படிக் கலையோடு
சீர்மையாய் பொல்லடி
பக்கீர் பைத்தில்
வாழ்வீச்சில் வளமான குரல் வீச்சில்
வல்லமை பெற்று
வபாத்தானார்
வருடங்கள் அறுபது
உயிர் வாழ்ந்து
வளமான சேவைகள்
நமக்கீந்து
இறையோனின் அழைப்பை
இவர் ஏற்று
இன்றோடு இருபத்து
மூன்றாண்டுரெண்டாயித்
தொன்று றமாழானில்
பத்ரு சகாக்கள் தினம் பதினேழில்
ஏகன் அழைப்பினை ஏற்றார்கள்
இப்பாரை விட்டுப் போனார்கள்
வல்லமை கொண்ட பெருநாயன்
வனப்பான சுவனத்தை
கொடுப்பதற்கு
உள்ளங்கள் உருகி அவருக்காய்
ஒன்றாகச் சேர்ந்து பிரார்த்திப்போம்!

***கலாபூஷணம் பக்கீர் ஜமால்தீன் பாவாவின் 23ஆவது சிரார்த்ததினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதையிட்டு கலாபூஷணம் அக்கரையூர் அப்துல் குத்தூஸ்ளின் ஆக்கத்தில் 'பக்கீர் ஜமால்தீன் பாவாவை பரிவோடு நினைவு கூர்வோம்' எனும் கவிதைத்தொகுதி உருவானது.***

அட்டாளைசேனை குறூப் நிருபர்

# 16 ஆவது எடிசன் விருது விழா

## ஐயோ சாமி நீ எனக்கு வேணாம் பாடலுக்கு சிறந்த உணர்ச்சிபூர்வமான பாடலுக்கான எடிசன் விருது

சிறந்த உணர்ச்சிபூர்வமான பாடலுக்கான எடிசன் விருதினை "ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்" பாடல் பெற்றுள்ளது.

(Best Sensational Song 2023)

16 ஆவது எடிசன் திரைப்பட விருது விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொத்துவில் ஜெஸ்மின் எழுதிய ''ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்'' பாடல் சிறந்த உணர்ச்சிபூர்வ மான பாடல் 2023 (Best Sensational Song 2023) விருதினைப் பெற்றுள்ளது.

இசையமைப்பாளர் சனுக்க, பாடகி விண்டி குணதிலக்க மூவரும் இணைந்து இவ்விருதினை பெற்றுக்கொண்டார்கள். விருதினை இயக்குனர், நடிகர் மனோஜ் பாரதிராஜா, சென்னைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர். இவர்களுக்கான வரவேற்பு நேற்றுமுன்தினம் மாலை இலங்கை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது. அமர காவியம் திரைப்படத்தில் ஜிப்ரான் இசையில் பொத்துவில் ஜெஸ்மின் எழுதிய தாகம் தீர பாடலுக்கு சிறந்த பாடலாசிரியருக்கான எடிசன் விருது கிடைத்தது.

பத்தாண்டுகளுக்குப் பிறகு ''ஐயோ சாமி'' பாடலுக்கு விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கு பயனாளிகளின் அக்கறையும் அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் செயற் றிட்டங்கள் ஒவ்வொன்றினதும் முழுமையான வெற்றிக்கு அதிகாரிகள் மட்டுமல்லாது பெற் றுக்கொள்ளும் பயனாளிகளும் அதிக கரிசனையும் அக்கறையும் செலுத்த வேண்டுமென கடற்றொ ழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி யுள்ளார்.

அத்துடன் அவ்வாறான ஒரு நிலை உருவாக் கப்படும் போதுதான் வழங்கப்படும் திட்டங்கள் அல்லது அபிவிருத்திகள் ஒவ்வொன்றும் எதிர் பார்க்கும் முழுமையான இலக்கை அடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (27.03.2024) நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச் சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் பல்வேறுபட்ட செய்திகள் ஊடகங்களில் வெளி யாகின்றன.

நீண்டகாலமாக இராணுவத்தினரது தேவைக் காக பயன்படுத்தப்பட்டு வந்த குறித்த காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் அக்காணிகளை

உரியவர்கள் இன்னமும் முழுமையாக பொறுப் பெடுக்காத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக பற்றைகளால் சூழ்ந்துள்ள காணிகளை துப்புரவு செய்து காணிகளின் உரிமை யாளர்கள் காணிகளை வரையறை செய்து எல்லை யிட்டு பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ள காலஅவகாசம் தேவையாகவுள்ளது.

இதனால் குறித்த காணிகளை உரிமையாளர்கள் இதுவரை பொறுப்பெடுக்காத நிலை காணப்படுகின்றது. இதனால் அந்த காணிகள் மோசடிகளுக்குள்ளாகும் நிலை உருவாகலாம்.

எனவே அக்காணிகளின் உரிமையா ளர்கள் தமது காணிகளை உரியவகை யில் எல்லையிட்டு பொறுப்பெடுக்கும் வரை அக்காணிகளின் பாதுகாப்பை பொலிஸாரும் படையினரும் பாதுகாத் துக் கொடுப்பது அவசியமாகும்.

அதுமட்டுமல்லாது அக்காலப்பகுதி வரை காணிகளின் பாதுகாப்பை உறு திப்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு பாதுகாப்பு படையினருக்கும் பொலி ஸாருக்கும் உள்ளது.

எனவே காணி உரிமையாளர்கள் அதை பெற்றுக்கொள்ளும்வரை பொலி ஸாரும் இராணுவத்தினரும் அக்காணிகளுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும்" என அவர் கூறி யுள்ளார்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பின களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநா தன் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். இளங்கோவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

## வடக்கில் புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்

### வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

வடக்கிலுள்ள வளங்களை அடையாளப்படுத்தி புலம்பெ யர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிக ரிடம் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். இலங்கைக் கான அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகர் பவுல் ஸ்டீபன் (Paul Stephens) வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோருக்கிடையிலான சந் திப்பு ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக வடக்கில் முன்னெடுக்கப் பட்ட மற்றும் தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், ஆளுநருக்கு தெளிவுப்படுத்தினார். அத்துடன் வடக்கு மாகாணத்தின் தற் போதைய நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் காணப்ப டும் வளங்களை அடையாளப்படுத்தி புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவுஸ்தி ரேலிய வாழ் இலங்கை புலம்பெயர் உறவுகளுக்கு தெளிவுபடுத்துமாறும் உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் கேட் டுக்கொண்டார். வடக்கு மாகாணத்தில் தொழிற்துறையை மேம்படுத்துவதன் மூலம் வேலையின்மை பிரச்சினை தீர்க்கப்படுவதுடன், பொருளாதார நிலையிலும் முன்னேற்றத்தை காண முடியும் என ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

## பாடசாலைக்கு ரூ.3 மில்லியன் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம்

மன்/ கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியா லயத்தில் சுமார் 3 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநி யோகத்திட்டம் அண்மையில் இரா ஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் திறந்து வைக்கப்பட்டது. காலநிலை மாற்றத்தை தாக்கிப்பிடிக்கும் ஒருங் கிணைந்த நீர் முகாமைத்துவ கருத் திட்டத்திற்கு அமைய "பசுமையான தேசம் சுபீட்சமான நாளை" எனும் தொனிப்பொருளில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக் கைக்கமைவாக இத்திட்டம் ஆரம் பிக்கப்பட்டது.

இதன்போது மடு வலயத்துக்குட் பட்ட தரம் 10 இல் கல்வி பயிலும் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 430 மாணவர்களுக்கான புத்தகப்பைக ளும் வழங்கி வைக்கப்பட்டன.

## யாழில் 69 ஆயிரத்து 700 தென்னங்கன்றுகள் விநியோகம்

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 69 ஆயி ரத்து 700 தென்னங்கன்றுகளை விநி யோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக, தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.மாவட்ட பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்தார். இவற்றில், இலவசமாக 21 ஆயிரத்து 200 தென்னங்கன்றுக ளும், 150 ரூபா மானிய அடிப்படையில் 8 ஆயிரம் தென்னங்கன்றுகளும்,விற் பனை மூலம் 5 ஆயிரத்து 840 தென் னங்கன்றுகளும் மற்றும் வீட்டுத்தோட்ட அடிப்படையில் 35 ஆயிரத்து 500 தென் னங்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஊடாக கடன்க ளைப் பெறுவதற்காக 80 பேர் விண்ணப் பித்துள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்.விசேட நிருபர்)

வடக்கு மாகாணத்தில் குற்றச்செயல்கள் முற்றா கக் கட்டுப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் பாது காப்பு உறுதிப்படுத்தப் படும் என வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக திலக் சி.ஏ.தனபால பதவியேற்றிருந் தார். இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சியே. வடக்கில் ஏற்கனவே பணியாற்றி யவன் என்ற அடிப்படையில் இங் குள்ள பிரச்சினைகள் பல வற்றை அனுபவரீதியாகவும் உணர்வுப்பூர்வமாகவும் நான் அறிவேன்.

அதனால், வடமாகாண மக்களுடன் இணைந்து பணி யாற்றுவதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்கப்போவ தில்லை. வடக்கு மாகாணத்தில் வீதிப்போக்குவரத்திலுள்ள குறை பாடுகள் விரைவில் நிவர்த்தி செய் யப்பட்டு மேம்பட்ட ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும். போதைப்பொருள் பிரச்சினைகள், சமூகத்தில் புரையோடிப்போயுள்ள இதர குற்றச்செயல்கள் விரைவில் கட்டுப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வ தற்கு முடியுமான அத்தனை நடவடிக் கைகளையும் விரைவில் மேற்கொள் வேன் என அவர் தெரிவித்தார்.

# மீரியபெத்த பகுதிக்கு மீண்டும் மண்சரிவு எச்சரிக்கை

கொஸ்லந்த மீரியபெத்த பெத்த வத்த பகுதியில் மீண்டும் ஒரு மண் சரிவு அனர்த்தம் ஏற்படும் நிலை காணப்படுவதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று எச்சரித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள தோட்டத்தின் 14 ஆம் மற்றும் 15 ஆம் லயன் குடி யிருப்பு பகுதியின் மேல் பகுதிகளில் இந்த நிலை அவதானிக்கப்பட்டதை யடுத்து கட்டட ஆய்வு நிறுவனத் துக்கு இதுதொடர்பில் அறிவிக்கப்பட் டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது. கட்டட ஆய்வு நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு இது குறித்து திட்டவட்டமாக கூறும் வரையில் எதுவும் கூற முடியாது என

தெரிவித்த பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் ஈ.எல் எம். உதய குமார அனர்த்த சூழ்நிலை ஏற்பட்டால் உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ள தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரி வித்தனர்.

## உடதும்பறை வீதி வளைவில் பஸ் விபத்து

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி உடதும்பறைப் பிரதே சத்திலுள்ள வீதி வளைவில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ள தாக உடதும்பறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் மூவர் காயமடைந்துள்ள னர். பஸ்சுக்கு பலத்த சேதம் ஏற் பட்டுள்ளது.

இது மலைப்பாங்கான பகுதி யென்பதால் மேல் உள்ள பாதை யிலிருந்து கீழ் உள்ள பாதையில் பஸ் வீழ்ந்துள்ளது.

இதேவேளை பிபில பிரதேசத் திலுள்ள ஆடைத்தொழிற்சாலை யொன்றில் பஸ் விபத்துக்குள்ளா கியுள்ளது. கொழும்பு நோக்கிப் பயணிக்கையில் இவ்விபத்து ஏற் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# மலைச்சாரலி

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

ருஹுணு பல்கலைக்கழகத்திற் கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்திற்கும் இடையிலான 'சகோத ரத்துவப் போர்' கிரிக்கெட் போட்டி நாளை முதல் 31ஆம் திகதி வரை ருஹுணு பல்கலைக்கழக விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

சகோதரத்துவப் போர் என்பது ஒரு கிரிக்கெட் போட்டி மட்டுமல்ல, இலங்கையின் வடக்கு மற்றும் தென் மாகாணங்களுக்கு இடையிலான ஒற்றுமை, நட்பு மற்றும் நல்லிணக் கத்தின் அடையாளமாகும்.

ருஹுணு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையத்தினால் (SRC) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து டன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்ட இப்போட்டியானது பல்க லைக்கழக சமூகங்களுக்கிடையில் சிறந்த உறவுகளையும் ஒத்துழைப் பையும் அபிவிருத்தி செய்வதையும் சமூக நல்லிணக்கம் மற்றும் பரஸ் பர புரிந்துணர்வை மேம்படுத்துவ தையும் நோக்கமாகக் கொண்டுள் ளது.

சகோதரத்துவத்திற்கான போராட் டத்திற்கு இலங்கை இந்திய உயர்ஸ் தானிகராலயம் மற்றும் லைக்கா ஞானம் நிதியம் என்பன ஒத்து ழைப்பு வழங்கியுள்ளன.

## சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர் நுவரெலியாவில் வைத்து கைது

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

நுவரெலியாவில் பதுங்கியிருந்த சர் வதேச போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் கைது செய்துள்ளனர்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் காரர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் நுவ ரெலியாவில் பதுங்கியிருப்பதாக பொலி ஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையி னர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கஹனவி டகே டொன் நந்தசேன என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தனது மனைன வியுடன் நுவரெலியாவில் தலைமறைவா கவிருந்த போதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இலங்கைக்கு திரும்புவதற்கு முன்னர், சிறிதுகாலம் இந் தியாவில் தலைமறைவாகவிருந்துள்ளார்.

## மாணவர் கௌரவிப்பு விழா

(கம்பளை நிருபர்)

கலஹா ஸ்ரீ சண்முகா ஆரம்ப பாட சாலையில் கடந்த வருடம் புலமை பரீட் சையில் சித்திப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதழ் வழங்கி கௌரவிக் கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சண்முகா ஆரம்ப பாடசாலை அதிபர் எஸ்.தயாபரன் தலைமையில் கலஹா இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது,

இதில் பிரதம அதிதியாக கல்வி இரா ஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மற்றும் கண்டி கல்வி வலய அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

புசல்லாவை நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பங்குனி உத்திரத் திருவிழா நிகழ்வுகள்.. நாவலப்பிட்டி சுழற்சி நிருபர். புசல்லாவை

# நகர்வலம்

## இயற்கை,அவசரகால நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய முறையான திட்டம் தேவை

### இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன்

நாட்டுக்குள் இயற்கை மற்றும் அவசரகால நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய சரியான திட்டமொன்றை வைத்திருப்பது மிகவும் அவசிய மானது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிர மித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இலங்கை பொறியியலாளர்கள் படையணியின் விசேட திறன்கள் மற்றும் தயார்நிலைகளை அவ தானிப்பதற்காக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் நேற்றுமுன்தினம் மத் தேகொடவிலுள்ள இலங்கை இராணுவ பொறி யியலாளர் படையணிக்கு விஜயம் செய்திருந்தார்.

மத்தேகொடவிலுள்ள இராணுவ இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி படைய ணிக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சரை, இலங்கை இராணுவ தொண்டர் படையின் கட் டளைத் தளபதியும், இலங்கை பொறியியலாளர் படையணியின் கேர்ணல் தளபதியுமான மேஜர் ஜெனரல் எம்.கே.ஜயவர்தன வரவேற்றார்.

அதனைதொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இராணுவ உபகரணங்கள் தொடர்

பாக விளக்கமளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணு சக்தி, வெடிகுண்டுகளை அகற்றுதல், மனிதாபி மான கண்ணிவெடி அகற்றும் திறன்கள் மற்றும் இராணுவப் பொறியியலாளர்களின் செயற்பாடு கள் தொடர்பான விரிவான விளக்கக்காட்சியும் இதன்போது நடைபெற்றது.

மேலும், இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள இரசாயன, உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி, வெடிபொருட்கள் அகற்றல், மனிதாபிமான கண் ணிவெடி அகற்றல் முகாமைத்துவ கருவி மற்றும் உபகரணங்களை அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பார்வையிட்டதன் பின்னர் அத னுடன் தொடர்புடைய செயல் விளக்கங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கை இராணுவ பொறியியலாளர் சேவை களின் கேர்ணல் நிலைக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லங்கா அமரபால, பொறியி யல் பிரதானி மேஜர் ஜெனரல் ஷேவான் குல துங்க, GOC 59 பிரிவின் பொறியியலாளர் மேஜர் ஜெனரல் கபில டோலகே மற்றும் அனர்த்த முகா மைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் (ஓய்வு) உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரும் இந்நிகழ் வில் கலந்துகொண்டனர்.

## யோர்க் சர்வதேச பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி

### வத்தளை கிளை சம்பியனானது

யோர்க் சர்வதேச பாடசாலைக ளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதா னத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக இலங்கை யின் பிரபல கிரிக்கெட் வீரரான பானுக ராஜபக்ச கலந்துகொண் டார்.

யோர்க் சர்வதேச பாடசாலைக ளுக்குட்பட்ட வத்தளை, சபுகஸ் கந்த, கடவத்தை ஆகிய கிளைக ளின் மாணவர்கள் இதில் தமது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தியதுடன் யோர்க் சர்வ தேச பாடசாலை வத்தளை கிளை சம் பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்நிகழ்வில் விசேட விருந்தி னராக சாரணர் சங்கத்தின் கம்பஹா மாவட்ட ஆணையாளர் திருமதி புஷ்பா நாகசேன வத்தளை, ஜாஎல உதவி மாவட்ட ஆணையாளர் இந் திக்க இளங்கோன், யோர்க் இன் டர்நேஷனல் பாடசாலை நிறுவனத் தின் தலைவர் ரோஹான் பெரேரா, அதன் பணிப்பாளர்களான தேஷான் பெரேரா மற்றும் ரொஷான் பெரேரா, யோர்க் சர்வதேச பாடசாலை வலை யமைப்பின் ஜாஎல அதிபர் திருமதி மோனா தர்மவர்த்தன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பொலிஸார் – கொள்ளையர் மோதல்; ஒருவர் பலி, இருவர் தப்பியோட்டம்

### குருநாகலில் சம்பவம்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

குருநாகல் பிரதேசத்தில் பொலி ஸாருக்கும் கொள்ளைக்கும்ப லொன்றுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் தப்பிச்சென்றுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதா வது,

குருநாகல் நாரம்மலை பிரதே சத்தில் கையடக்கத்தொலைபே சியை வாங்குவதற்கு சென்றவர்க ளிடமிருந்த பணத்தை திருடர்கள் கொள்ளையிட முயற்சித்துள்ளனர். இதன்போது ஏற்பட்ட மோதலை தடுக்க பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதில் கொள்ளையர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தி யசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போது அவர் பாதிவழியிலேயே உயி ரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

அதேநேரம் கையடக்கத் தொலை பேசியை கொள்வனவு செய்ய வந்த இருவரும் ருவன்வெல பிரதேசத் தைச் சேர்ந்தவர்கள் என தெரியவ ருகின்றது. அவர்கள் சென்ற வாகன மும் தாக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் தினகரன் நிருபர்)**

சட்டவிரோதமான முறையில் உள் நாட்டில் தயாரித்த துப்பாக்கியை வைத்திருந்த சந்தேகநபரொருவரை திறப்பனை பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

சந்தேகநபர், 52 வயதுடைய எப் பாவல பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் கிடைத்த இரக சிய தகவலுக்கமைய நேற்றுமுன்தி னம் திறப்பனை பொலிஸார் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது உள்ளூரில் தயாரிக் கப்பட்ட துப்பாக்கியொன்றை குற் றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்ற னர். விசாரணைகளின் பின்னர் சந் தேகநபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

### ஜப்பானிய முதலீட்டாளரின் பங்களிப்புடன்

## புறக்கோட்டை Floating Market மீண்டும் புத்துயிர் பெறவுள்ளது

### 30 வருட குத்தகைக்கான ஒப்பந்தம் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கைச்சாத்து

புறக்கோட்டை மிதக்கும் சந்தை (Floating Market) மீண்டும் புத்துயிர் பெறும். அதற்கு ஜப்பானிய முதலீட் டாளர் ஒருவர் முன்வந்துள்ளார்.

அதற்கான ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (27) பத்தரமுல் லையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மற்றும் ஜப்பானிய முதலீட்டாளர் அகிரா ஹிரோஸ் (Akira Hirose) தலைமையில் இடம்பெற்றது. அதன்படி, புறக்கோட்டை மிதக்கும் சந்தையின் நிதியை அரச தனியார் பங்களிப்பின் கீழ் அபிவிருத்தி செய் யுமாறு அறிவுறுத்தினார்.

இதற்காக முதலீட்டாளர்களை முன்வருமாறு நகர அபிவிருத்தி அதி காரசபை அழைப்பு விடுத்திருந்தது.

இனை அவதானித்த ஜப்பானிய முதலீட்டாளர், மிதக்கும் சந்தை வளாகத்தை ஜப்பானிய நகரமாக வும் மிதக்கும் சந்தையாகவும் உரு வாக்க திட்டமிட்டுள்ளார்.

ஜப்பானிய முதலீட்டாளருக்கு 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப் படும். வெளிநாட்டு முதலீட்டா ளர்களை இலக்கு வைத்து புறக் கோட்டை மிதக்கும் சந்தை வளாகம் சுற்றுலா நகரமாக நிறுவுவதே இதன் நோக்கமாகும். அதன்அபிவிருத்தித் திட்டகாலம் 06 மாதங்கள்ஆகும்.

புறக்கோட்டை மிதக்கும் சந்தை,

நாட்டில் பொருளாதார பிரச்சினை களுடன் இதனை அபிவிருத்தி செய் வதற்கு நகரஅபிவிருத்தி அதிகார சபையின் நிதியை அரச தனியார் பங்களிப்பின் கீழ் அபிவிருத்தி செய் யுமாறு அறிவுறுத்தினார்.

இதற்காக முதலீட்டாளர்களை முன்வருமாறு நகர அபிவிருத்தி அதி காரசபை அழைப்பு விடுத்திருந்தது.

இனை அவதானித்த ஜப்பானிய முதலீட்டாளர், மிதக்கும் சந்தை வளாகத்தை ஜப்பானிய நகரமாக வும் மிதக்கும் சந்தையாகவும் உரு வாக்க திட்டமிட்டுள்ளார்.

ஜப்பானிய முதலீட்டாளருக்கு 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப் படும். வெளிநாட்டு முதலீட்டா ளர்களை இலக்கு வைத்து புறக் கோட்டை மிதக்கும் சந்தை வளாகம் சுற்றுலா நகரமாக நிறுவுவதே இதன் நோக்கமாகும். அதன்அபிவிருத்தித் திட்டகாலம் 06 மாதங்கள்ஆகும்.

புறக்கோட்டை மிதக்கும் சந்தை, கொழும்பு, புறக்கோட்டை, பஸ்தி யன் மாவத்தையிலமைந்துள்ளது. இது 92 கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன் பேர வாவியில் படகுகளில் பல கடைகள் நிறுவப் பட்டுள்ளன.

தற்போது அங்கு வியாபாரம் செய்து வரும் கடை உரிமையாளர்க ளுக்கு எவ்வித அறிதியும் ஏற்படாத வகையில் இதனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீட மைப்பு அமைச்சர் பிரசன்ன ரண துங்க, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத் துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டா பய ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் அடிப்படையில் புறக்கோட்டை மிதக்கும் சந்தை 2014 ஆகஸ்ட் 25 அன்று திறக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

## வெங்காய விலையில் மாற்றம்

வட மாகாணத்திலிருந்து வெங்கா யம் அதிகளவில் தம்புள்ள பொருளா தார மத்திய நிலையத்திற்கு வந்துள் ளமையால் வெங்காய விலையில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப் புகள் காணப்படுவதாக தெரியவரு கின்றது.

கண்டிப் பிரதேசத்தில் யாழ்ப்பாண வெங்காயம் அதிகளவில் வந்து குவிந்துள்ளதையடுத்து தற்போது விலை குறைவடைந்துள்ளதாக வர்த் தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மலைநாட்டுப் பிரதே சங்களிலிருந்தும் அதிகளவு காய்க றிகள் வந்துள்ளமையால் தொடர் விலை குறைவு காணப்படுவதாக தெரியவருகிறது.

அதாவது போஞ்சி, கரட், லீக்ஸ் போன்றவற்றின் விலை குறைவ டைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரி விக்கின்றனர்.

## Agri Tech – 24 விவசாய தொழில்நுட்ப கண்காட்சி

காலநிலை சீரமைவு நீர்ப்பா சன விவசாய திட்டத்தின் ஏற் பாட்டில் Agri Tech 24 விவசாய தொழில்நுட்ப கண்காட்சி ஹுங்கம விவசாய பூங்காவில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை விவசாய அமைச் சர் மஹிந்த அமரவீர ஆரம்பித்து வைத்தார்.

விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பத்தை விவசாயி களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த அனைத்து நிறுவனங்க ளினதும் ஒத்துழைப்புடன் இக்கண் காட்சி நடைபெற்றது.

## 53 மசாஜ் நிலையங்களுக்கு பூட்டு 137 பெண்கள் கைது

### நீர்கொழும்பு பிரதேசத்தில்

நீர்கொழும்பு பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச் சார விடுதிகளில் பணிபுரிந்து வந்த 2 பெண்களுக்கு எய்ட்ஸ் தொற்று ஏற் பட்டுள்ளதாக மருத்துவ பரிசோதனை யில் தெரியவந்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தலதுவ நேற்று (27) இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். சோதனையின் போது 53 மசாஜ் நிலையங்கள் மூடப்பட்டு அதில் பணிபு ரிந்த 137 பெண்கள் கைது செய்யப் பட்டனர்.

## அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம், கல்பிட்டி தேத்தாப் பளை ரோமன் கத்தோலிக்கத் தமிழ் வித்தியாலய அதிபர் அருட் சகோதரி மேரி டிலானி அரச பணி யிலிருந்து தனது 60 வது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

இதனை முன்னிட்டு பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் அண்மை யில் (20) அதிபரின் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

அவரது பிறந்தநாள் கொண்டாட் டத்துடன் மணிவிழாக் கொண் டாட்டமும் ஒழுங்குசெய்யப்பட்டி ருந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் கள் என, தனித்தனியாக அதிபரை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி, பரிசில்களை வழங்கி கௌரவித்த னர்.

அருட் தந்தை, அருட் சகோதரி கள் ஆகியோருடன் கல்விப்புலத் திலுள்ளோர், அயற்பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித் தனர்.

'தேத்தா ஊற்று' என்ற பெயரில் மணிவிழா மலர் ஒன்றும் அங்கு

வெளியிட்டுவைக்கப்பட்டது. இப் பாடசாலை வரலாற்றில் வெளிவ ரும் முதலாவது மலர் இதுவாகும்.

இவ்விழாவில் புத்தளம் ஒய்வு நிலை கல்வி பணிப்பாளர் இஸட். ஏ.சன்ஹீர் உரையாற்றினார்.

"தேத்தா ஊற்று" மலர் 66 பக்கங் களைக் கொண்ட ஒரு மலர். இதில் 20 பக்கங்கள் வர்ணப்படங்களால் நிரம்பியுள்ளமை ஒரு சிறப்பம்ச மாகும். ஆசிச் செய்திகள், வாழ்த் துச் செய்திகள் என்பனவற்றுடன் பாடசாலை வரலாறு, அடைவுமட் டங்கள், இக்கலாசாலையில் இடம் பெற்ற நிகழ்வுகள் என அனைத்தும் இம்மலரில் ஆவணப்படுத்தப்பட் டுள்ளன.

ஹேமாஸ் பாமசிட்டிகல்ஸ் அனுசரணையில் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்தின் கொழும்பு மாவட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடர் அண்மையில் கொழும்பு ஹவ்லொக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அணிகள் பங்குபற்றியிருந்ததுடன் கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்ட அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியிருந் தன. அதில் கண்டி மாவட்ட அணி சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது.

சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத்தின் பெயரில் வழமை போன்று இவ்வருடமும் இலங் கையின் பல பள்ளிவாசல்களிலும் இஸ் லாமிய நிலையங்களிலும் நோன்பு துறக்கும் விஷேட இப்தார் நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகை யில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி யின் நேரடி கண்காணிப்பில் அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனியின் தலை மையில் கடந்த ஞாயின்று கொழும்பில் நடாத்தப்பட்ட விஷேட இப்தார் நிகழ்ச் சியின் போது பிடிக்கப்பட்ட படம். இந்நிகழ் வில் உலமாக்கள், புத்திஜீவிகள் கல்வி மான்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

புத்தளம் தில்லையடி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய பஞ்ச குண்டபக்ஷ மகா கும்பாபி ஷேகத்தின் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

**படங்கள் : புத்தளம் தினகரன் நிருபர்**

# கொஹுவல மேம்பால நிர்மாணப் பணி அமைச்சர் பந்துல குழுவினர் கள விஜயம்

கொஹுவளை மற்றும் அதனைச் சூழவுள்ள கடும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக 2021ஆம் ஆண்டு ஹங்கேரி அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கொஹுவல மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகள், உள்ளூர் ஒப்பந்த நிறுவனத்தின் நிதியில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 நெருக்கடி மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக 2022ஆம் ஆண்டு இத்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.

இறுதிக்கட்ட நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுவதை அவதானிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அங்கு விசேட கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார் .

# அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரில் நாளை விபுலாநந்த அடிகளார் உருவச்சிலை திறப்புவிழா

அவுஸ்திரேலியா சிட்னி மாநகரில் நாளை 29 ஆம் திகதி வெள்ளியன்று உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவ ச்சிலை திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் தலைவரும், உதயசூரியன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பரோபகாரி நாகமணி குணரெத்தினம் 'கிழக்கு உதயசூரியன்' முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு சிலை எடுக்கிறார். சுவாமிகள் பிறந்த இலங்கைக்கு வெளியே முதல் தடவையாக கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச்சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும். இச்சிலை சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தினம் நேற்று 27.03.2024 ஆம் திகதி ஆகும். நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிட்னி மாநகரில் உருவச்சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சிலை திறப்புவிழாவிற்கு உலகநாடுகளிலிருந்து குறிப்பாக இந்தியா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகை தரவிருக்கின்றனர்.

வித்தகர் சுவாமி விபுலாநந்தஅடிகளார் பிறந்த காரைதீவு மண்ணிலிருந்து சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் ஆலோசகருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையிலும் மட்டக்களப்பு மண்ணிலிருந்து மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையிலும் குழுவினர் இச்சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தஅடிகளாருக்கு இலங்கை நாட்டிற்கு வெளியே முதன்முதலாக அவுஸ்திரேலிய மண்ணில் முதலாவது வெண்கலச்சிலை திறந்து வைக்கப்படவிருக்கின்றது. அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

சுவாமியின் அபிமானியும்எழுத்தாளரும் சமூகசேவையாளருமான அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த நா.குணரெத்தினம் தன்னந்தனியனாக நின்று இவ்வெண்கலச்சிலையை நிறுவியுள்ளார்.

சிலைதிறப்புவிழாவின்போது 'சிட்னியில் அடிகளார் படிவமலர்' எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கிது. இது இவ்வாறிருக்க, உலகநாடுகளை உலுக்கிய கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அவுஸ்திரேலியாவின் சிட்னிநகரில் கடந்த 2020.04.04 ஆம்திகதி நடைபெறவிருந்த முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்தஅடிகளாரது திருவுருவச்சிலை திறப்புவிழா பிற்போடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை உதயசூரியன் குணரெத்தினம் காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச் சிலையை நிறுவியுள்ளார்.

அதேபோல் காரைதீவு சுவாமி விபுலானந்த கலாசார மண்டபத்திலும் விபுலானந்த சிலை நிறுவவுள்ளார்.

தனதுபெற்றோரான காரைதீவைச் சேர்ந்த பொன்னம்பலம்_ நாகமணி தம்பதிகள் நினைவாகவும், தனதுவளர்ப்பு தந்தை காத்தமுத்து வேல்நாயகம் (தலைமை ஆசிரியர்) தம்பதிகளின் நினைவாகவும் இச்சிலைகள் நிறுவப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

காரைதீவு குறூப் நிருபர்


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்காக 60/70 தர
Bulk Bitumen 1,300 MT கொள்வனவு செய்தல்

| விபரம் | இயந்திராலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 60/70 Grade Bulk Bitumen | All RDA Asphalt Plants | 1,300 MT |

மேற்குறிப்பிடப்பட்ட 60/70 தர Bulk Bitumen கொள்வனவு செய்வதற்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.28** ஆம் திகதி முதல் **2024.04.17** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

பெறுகை அறிவித்தல்

நகராட்சி பகுதிகளில் இலக்கம் 06,07,08,09 மற்றும் 10 ஆகியன உட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் அகற்றுதல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தெற்கு வலயத்திற்குட்பட்ட பிட்டகோட்டே, பாகொட, கந்தவத்த, நுகேகொட மற்றும் கங்கொடவில பகுதிகளுக்கு சொந்தமான (பகுதி எண் 06.07.08.09 மற்றும் 10) ஆகிய இடங்களில் திண்மக் கழிவுகளை சேகரித்து அகற்றுவதற்காக மேற்படி பகுதிகளை சுத்தம் செய்வதற்காக **2024.08.01** ஆம் திகதி முதல் **2028.07.31** ஆம் திகதி வரையிலான **04 வருட காலங்களுக்காக 2024.03.28 ஆம் திகதி முதல் 2024.04.19** ஆம் திகதி வரை **பி.ப.02.00** மணிவரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**2024.03.28** ஆம் திகதி **2024.04.18** ஆம் திகதி **மு.ப.9.00 முதல் பி.ப.3.00** மணி வரை, உங்கள் நிறுவனத்தின் முகப்பு கடிதத்துடன் **ரூ.29,500.00 (ரூ.25,000.00+18% வரி உட்பட)** தொகையை இந்த அலுவலகத்தில் செலுத்தி, விலைகோரலுக்கான தொடர்புடைய ஆவணப் படிவங்களை இந்த பெற்றுக்கொள்ளலாம்

விலைமனுக்கோரலுக்கான ஆவணப் படிவம் **2024.04.19** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், **அதே நாளில் பி.ப. 02.15 மணிக்கு** மனுக்கள் திறக்கப்படும்.

**ஆர், ஏ, ஷாலிக்கா இரணவீர,**
**நகராட்சித் தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**


# ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' நூல் அறிமுக விழா

'ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் 'சமூக சிற்பி' வி.எஸ். துரைராஜாவின் (சத்தியப்பிரமாண ஆணையாளர், தலைவர் தமிழ்க் கல்லூரி கனடா) நூல் அறிமுக விழாவே நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமை தாங்குவதுடன், சிறப்பு அதிதியாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது தமிழ் வாழ்த்தை கொ/சைவ மங்கையர் வித்தியாலய மாணவி சக்திகா சிறிகுமரன் இசைக்கவுள்ளார்.

வரவேற்புரையை லீலாவதி மோகனசுந்தரமும், வாழ்த்துரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் த.அரியரத்தினம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், நூலாசிரியர் அறிமுகத்தை ஆரோக்கியம் பிரான்சிஸும், நூல் அறிமுகத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாசந்திரா பிரகாஷும், நன்றியுரையை ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரையும், ஏற்புரையை நூலாசிரியர் 'சமூக சிற்பி' வி.எஸ்.துரைராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

## மன்னிப்புக் கோரல்

இல.31 மன்னார் வீதி, நெளுக்குளம் வவுனியாவில் வசிக்கும் குமார் ரினோஜன் ஆகிய நான், கடந்த 2022.12.15 அன்று ரெப்லட் (Tablets) வைத்திருந்தமையால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டேன். தற்போது நான் எனது பிழைக்கு மன்னிப்பு கோருவதுடன் நான் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை செய்யமாட்டேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

# பேருவளை அஹதியா பாடசாலை வருடாந்த இப்தார் நிகழ்வு

பேருவளை மஹகொட அஹதியா பாடசாலையின் வருடாந்த இப்தார் நிகழ்வு மருதானை பி.ஆர்.மண்டபத்தில் தலைவர் ஏ.ஐ.எம்.ரியாஸ்தீன் ஹாஜியார், அதிபர் பி.எஸ்.எம்.சியாஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பேருவளை பிரதேச செயலாளர் ரன்ஜன் பெரேரா, மொல்லியமலை ஹிழ்ரியா பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.எஸ்.எம்.பாஸில் (அஷ்ரபிஅம்ஜதி) அகில இலங்கை அஹதியா சம்மேளன உப செயலாளர் ஹிசாம் ஸுஹைல், தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க தலைவர் ஏ.பி.எம்.சஸுஹர் ஹாஜியார் உட்பட உலமாக்கள், பேருவளை பிரதேச செயலக அதிகாரிகள், சிங்கள பிரமுகர்கள் என 300ற்கும் அதிகமானோர் இதில் பங்கு பற்றினர்.

**(படங்கள் பேருவளை நிருபர்)**


பெறுகை அறிவித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**Tender for the supply of Pharmaceuticals, and Surgical Consumables Items.**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறையின் கீழ் 2024.04.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பின்வரும் Pharmaceuticals, Surgical Consumables and Dressing Items ஆகியவற்றை வழங்குவதற்காக நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| Tender No. | Item | Qty | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| Q125/24 | Drugs – Meropenam 500mg Injection | 19,000 Vials | Rs.3,500.00 |
| Q126/24 | Drugs – Pantoprazole 40mg injection | 45,000 Vials | Rs.3,500.00 |
| Q103/24 | Surgical Consumable – Oxygenators Adult – (Perfusion) | 40W – 160 Nos.<br>25W – 140 Nos.<br>30W – 10 Nos | Rs.3,500.00 |
| Q127/24 | Surgical Consumable – Custom Tubing Pack – Adult (Perfusion) | 340 Nos. | Rs.3,500.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள முகவர்கள் அல்லது உற்பத்தியாளரொருவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் அல்லது கேள்விதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்யலாம்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று.
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
(iii) வியாபார பதிவின் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று.

2. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் முன்வைப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விலைமனுக்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களைத் தவிர வேறேதாவது படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2024.03.28 ஆம் திகதியிலிருந்து 2024.04.24 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
6. 2024.04.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் மூடப்பட்டு, திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
7. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் நிராகரிப்பதற்கும் கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான சுயஉரிமையை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பிரிவு**
**பொது கேள்வி** 4502T

**SUPPLY OF SAFETY SHOES WITH STEEL TOE CAP**

இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2024 ஏப்ரல் 22 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்டுள்ள காசாளர் ஒருவருக்கு விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**www.ceypetco.gov.lk & www.dqmarket.com** ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புகள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

    முக்கியமான உபகரணங்கள் மற்றும் பதவிநிலை அலுவலர்களின் சரியான நேர ஆட்சேர்ப்புக்களின் முன்மொழிவுகள்.

05. 2024 மார்ச் 27 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் வார இறுதிகள் நீங்கலாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் கொழும்பு-09, பேஸ்லையின் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலை தலைமையக நிதிப் பிரிவில் ரொக்கப் பணத்தில் ஒவ்வொரு விலைமனுவிற்கும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பணப் பற்றுச்சீட்டுடன் சிறைச்சாலை தலைமையக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, மூடப்பட்ட பின்னர் விரைவாகவே கொழும்பு-09, பேஸ்லையின் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலை கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நேரடியாக சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
07. விலைமனுக்கள் 2024 ஜூலை 03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
08. அனைத்து விலைமனுக்களும் 373,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் கொழும்பு-09, பேஸ்லையின் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலை தலைமையக சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தின் உருமாதிரியில் வழங்கப்பட்டதும் 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூலை 31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமாகவிருத்தல் வேண்டும். விலைமனு பாதுகாப்பு பிரகடனம் மற்றும் காப்புறுதி உத்தரவாதம் ஆகியன ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் முதல் விண்ணப்பத்திலேயே மாற்றக்கூடியதும் குறிப்பிட்டுள்ள தொகைக்காக சிறைச்சாலை ஆணையாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.
09. 2024 ஏப்ரல் 2 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு தள விஜயமானது தள அமைவிடத்தில் ஆரம்பமாகும்.
10. கொழும்பு-09, பேஸ்லையின் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலை கேட்போர் கூடத்தில் 2024 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
11. சிறைச்சாலை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் ஏதாவதொரு விலைமனுவை அல்லது அனைத்து விலைமனுக்களையும் எந்தவொரு காரணத்தையும் வழங்காமல் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை சிறைச்சாலை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளதுடன் அவரது தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.
12. விலைமனுக்களின் தயாரிப்பு மற்றும் ஒப்படைப்பு ஆகியவற்றிற்கான விலைமனுதாரரின் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு சிறைச்சாலை திணைக்களமானது பொறுப்பேற்க மாட்டாது.
13. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கீழேயுள்ள தொடர்புகளின் வழியாக சிறைச்சாலை தலைமையக பணிப்பாளர் (பொறியியலாளர்) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கவனத்திற்குரியவர் : பணிப்பாளர் (பொறியியலாளர்)**
**முகவரி : சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலை தலைமையகம், இல. 150, பேஸ்லையின் வீதி, கொழும்பு-09.**
**தொலைபேசி : 011-4677177/011-4677179**
**தொலைநகல் : 011-4677180**
**மின்னஞ்சல் : prisonengineering@gmail.com**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சிறைச்சாலைகள் திணைக்களம்.**

Daily News Classifieds, the Housewives' companion

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 மார்ச் 28 வியாழக்கிழமை

# ஹசரங்கவின் ஐ.பி.எல். வருகையில் ஒரு வார காலம் வரையில் தாமதம்

## நீண்ட காலமாக குதிகால் வலியால் அவதி

இலங்கை டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்க தனது இடது குதிகால் பகுதியில் நீடிக்கும் வலி தொடர்பில் வெளிநாட்டு மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்று வரும் நிலையில் இந்திய பிரீமியர் லீக் தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் இணைவதில் மேலும் ஒரு வாரம் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் தொடரில் ஹசரங்க விளையாடியபோதும் அவர் வலியுடனேயே போட்டிகளில் ஆடியிருப்பதாக தெரியந்துள்ளது. இலங்கை கிரிக்கெட் மருத்துவ குழுவினர் அந்த வலி தொடர்பில் அவதானித்திருப்பதோடு, அவரது இடது குதிகாலில் அந்த வலி ஏற்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் காயத்தின் உண்மையான தன்மை குறித்து கண்டறிவது மற்றும் அதனை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி மேலும் மருத்துவ ஆலோசனையை பெறும்படி இலங்கை கிரிக்கெட் மருத்துவர்கள் ஹசரங்கவை அறிவுறுத்தியுள்ளனர். இதனை செய்வதற்காக அவர் அடுத்த வாரம் வெளிநாடு செல்லவுள்ளார் என்று தெரியவருகிறது.

ஹசரங்க இன்னும் சன்ரைசஸ் அணியில் இணையவில்லை என்பதோடு அவர் இணையும் திகதி தொடர்பிலான விபரம் வெளியாகவில்லை.

எனினும் தாம் அணித் தலைவராக செயற்படும் டி20 போட்டிகளில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் உலகக் கிண்ண போட்டி நடைபெறவுள்ள நிலையில் ஹசரங்க மற்றும் இலங்கை கிரிக்கெட் அது தொடர்பிலேயே அதிக அவதானம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் அவர் ஓய்வெடுப்பது, சிகிச்சை பெறுவது அல்லது புனர்வாழ்வு பெற வேண்டி ஏற்பட்டால் அவர் ஐ.பி.எல். தொடரில் இணையும் காலம் மேலும் தாமதம் அடையக் கூடும்.

ஹசரங்க 2022 ஐ.பி.எல். பருவத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக சிறப்பாக ஆடி அந்தத் தொடரில் மொத்தம் 26 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்நிலையில் சன்ரைசஸ் அணி அண்மையில் நடந்த வீரர்கள் ஏலத்தில் ஹசரங்கவை இந்திய நாணயப்படி 1.5 கோடிக்கு வாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் நடுவரின் முடிவுக்கு அதிருப்தியை வெளியிட்ட ஹசரங்கவுக்கு தற்போது நடைபெற்று வரும் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் தடை விதித்தது.

டெஸ்ட் ஓய்வு முடிவை மாற்றி மீண்டும் டெஸ்ட் அணியில் இணைக்கப்பட்ட நிலையிலேயே அவருக்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தடை அமுலுக்கு வந்தது. இல்லாவிட்டால் அவர் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை ஆடும் நான்கு போட்டிகளிலும் தடையை எதிர்கொள்ள வேண்டி இருந்திருக்கும்.

# டெஸ்ட் தரவரிசையில் அதிரடி முன்னேற்றம் கண்டார் தனஞ்சய

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்று ஆட்ட நாயகன் விருதையும் வென்ற இலங்கை அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் அதிரடி முன்னேற்றம் கண்டுள்ளார்.

சில்ஹட்டில் நடந்த இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 102 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 108 ஓட்டங்களையும் பெற்ற தனஞ்சய தரவரிசையில் 15 இடங்கள் முன்னேறி 14 ஆவது இடத்தை பிடித்துள்ளார். இது அவரது சிறந்த தரநிலையாக பதிவானது.

இதன்போது மொத்தம் 695 தர நிலை புள்ளிகளை பெற்றிருக்கும் தனஞ்சய டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான முதல் பத்து இடங்களை எட்டுவதற்கு 40 புள்ளிகளை மாத்திரே குறைவாக பெற்றுள்ளார்.

முதல் டெஸ்டின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்ற மற்றொரு வீரரான கமிந்து மெண்டிஸ் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 64 ஆவது இடத்துடன் தர நிலையை ஆரம்பித்துள்ளது.

சில்ஹட் டெஸ்ட் கமிந்து மெண்டிஸ் ஆடிய இரண்டாவது டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் இரண்டாவது இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வேகப்பந்து வீச்சாளர் கசுன் ராஜித்த டெஸ்ட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் 6 இடங்கள் முன்னேறி 38 ஆவது இடத்தையும் லஹிரு குமார 6 இடங்கள் முன்னேறி 48 ஆவது இடத்தையும் பெற்றனர்.

# றியல் மெட்றிக்ஸ் வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

ஐக்கேனிக் ஸ்ரீலங்கா அமைப்பின் அக்கரைப் பற்று பிராந்தியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் றியல் மெட்றிக்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 16 அணிகள் பங்கேற்றன. இதன் இறுதிப் போட்டியில் ரைசிங் ஸ்டார் அணியை வீழ்த்தியே றியல் மெட்றிக்ஸ் கிண்ணத்தை வென்றது.

# டைட்டானிக் மரத் துண்டு 718,750 டொலருக்கு ஏலம்

டைட்டானிக் திரைப்படத்தில் கதாநாயகி ரோஸ், உயிர்பிழைப்பதற்குக் காரணமாக இருந்த மரத்துண்டு ஏலம் ஒன்றில் 718,750 டொலருக்கு விலைபோனது.

'பிளேனட் ஹொலிவுட்' என்ற உணவக, உல்லாச விடுதி நிறுவனத்திற்குச் சொந்தமான பொருட்களும் ஆடைகளும் ஏலமிடப்பட்டபோது இந்த மரத்துண்டும் விற்பனை செய்யப்பட்டது. கதவுச் சட்டத்தின் ஒரு பகுதியான அந்த மரத் துண்டில், காதலிக்கு மட்டுமே இடமுண்டு என்று விடாப்பிடியாகக் கூறும் கதாநாயகன் பின்னர் அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கிய காட்சி பெரும் சர்ச்சைக்கு உள்ளான காலமும் இருந்தது.

ரோஸ் ஒரு சுயநலவாதி என்றும் கதாநாயகன் ஜேக் ஒரு முட்டாள் என்றும் கூறி 'டைட்டானிக்' திரைப்பட இயக்குநருக்குப் பலரும் மின்னஞ்சல்கள் அனுப்பினர்.

இதற்கிடையே, கதவு என்று பலரும் தவறாக நினைத்திருந்த அந்த மரத்துண்டு, 1912ஆம் ஆண்டில் நடந்த உண்மையான 'டைட்டானிக்' அசம்பாவிதத்தைச் சேர்ந்த குப்பையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்று 'ஹெரிடேஜ் ஒக்ஷன்ஸ்' குறிப்பிட்டது.

# ஒருபால் திருமணத்தை நெருங்கும் தாய்லாந்து

தாய்லாந்து தென் கிழக்கு ஆசியாவின் முதல் நாடாக ஒருபால் திருமணத்தை அங்கீகரிக்கப்படுவதை நெருங்கியுள்ளது.

தாய்லாந்து பாராளுமன்ற கீழவை ஒருபால் திருமணத்தை அங்கீகரிக்கும் திருமண சமத்துவ சட்டமூலத்திற்கு ஆதரவு அளித்துள்ளது. எனினும் அது சட்டமாவதற்கு முன் செனட் மற்றும் அரச ஒப்புதலை பெற வேண்டி உள்ளது. 2024 முடிவில் இந்த சட்டம் நிறைவேற்றப்படும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசிய திருமண சமத்துவ குழுவின் தலைவரும் எம்.பியுமான டனுபோன் புனகன்டா, 'இது சமத்துவத்தின் ஆரம்பமாகும். இது அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வாக இல்லாதபோதும் சமத்துவத்தின் முதல் படியாக அமையும்' என்றார்.

இதில் திருமணம் என்பது ஆண் மற்றும் பெண்ணுக்கு இடையிலான கூட்டிணைவு என்பதற்கு பதில் தனி நபர் இருவருக்கு இடையிலான கூட்டிணைவு என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

# பாலம் இடிந்த விபத்தில் அறுவரின் மரணம் உறுதி

அமெரிக்காவின் பால்ட்டிமோர் நகரில் இடிந்து விழுந்த பாலத்தில் இருந்து விழுந்த 6 பேர் உயிரிழந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நகரில் உள்ள பிரான்சிஸ்ஸ்கொட் கீ பாலம் மீது சரக்குக் கப்பல் மோதியபோது பாலத்தின் மேலே வேலை செய்து கொண்டிருந்த 8 பேர் கீழே விழுந்தனர். அவர்களில் இருவர் மீட்கப்பட்டனர். எஞ்சிய 6 பேரைத் தேடும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

விபத்து நேர்ந்து 18 மணி நேரம் ஆன நிலையில் அவர்கள் குளிரான நீரில் உயிரோடு இருப்பதற்கு சாத்தியம் அவ்வளவாக இல்லை என்று அமெரிக்கக் கடற்படையும் காவல் துறையும் கூறின. ஊழியர்கள் 50 அடி ஆழமுள்ள படப்ஸ்கோ ஆற்றுக்குள் விழுந்தனர். அதன் தட்பவெப்பநிலை 8 டிகிரி செல்சியஸாக இருந்தது. பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தற்போது உதவி வழங்கப்படுகிறது. பாலம் மீது மோதிய டாலி கப்பல் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்டது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் உக்கிரம்: உதவிக்கும் அழைப்பு

காசாவில் பஞ்சம் ஒன்று ஏற்படும் அச்சுறுத்தல் அதிகரித்து போர் நிறுத்தம் ஒன்றுக்கான சர்வதேச அழுத்தத்திற்கு மத்தியிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

முற்றுகையில் உள்ள காசாவுக்கு உதவிகள் தேவைப்படுவதோடு அந்தப் பகுதியில் வானில் இருந்து தொடர்ந்து உதவிகளை போடுவதாக அமெரிக்கா கூறியுள்ளது. எனினும் அவ்வாறு விழும் உதவிகளை பெறும் முயற்சியில் 18 பேர் கொல்லப்பட்டிருக்கும் நிலையில், வானில் இருந்து உதவிகளை போடுவதை நிறுத்தும்படி ஹமாஸ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் இன்னும் இஸ்ரேலிய தரைப்படை நுழையாத பகுதியாக இருக்கும் தெற்கு காசாவின் ரபாவில் இஸ்ரேலின் வான் தாக்குதலை அடுத்து இரவு வானில் பாரிய தீப்பிழப்பு வெளியானது. இங்கு 1.5 மில்லியன் மக்கள் நிரம்பி வழிவதோடு, பெரும்பாலானவர்கள் காசாவின் தெற்கு விளிம்பு வரை இடம்பெயர்ந்து எகிப்துடனான எல்லையில் இருக்கும் இந்தப் பகுதியை அடைந்துள்ளனர்.

வடக்கு காசாவில் உள்ள காசா நகரிலும் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்களால் நேற்று கறும்புகை வெளியான வண்ணம் இருந்தது. இங்குள்ள காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபாவில் இஸ்ரேலியப் படை ஒரு வாரத்துக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 66 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் ரபா மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட மூவரும் உள்ளடங்குகின்றனர்.

அதேபோன்று காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 76 பேர் கொல்லப்பட்டு மேலும் 102 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி ஆறு மாதங்களாக நீடிக்கும் போரில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 32,490 ஆக அதிகரித்துள்ளது.

காசாவில் அவசர போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தி பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நாட்கள் கடந்திருந்தபோதும் மோதல்களில் எந்தத் தணிவும் ஏற்படவில்லை.

காசா யூனிஸ் நகரில் இருக்கும் மேலும் இரு மருத்துவமனைகளை இஸ்ரேலியப் படை சுற்றிவளைத்திருப்பதோடு இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் தற்காலிக முகாம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனையில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கி இருக்கும் நிலையில் அவர்கள் உயிர் ஆபத்தை சந்தித்து வருவதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் எச்சரித்துள்ளது.

போருக்கு மத்தியில் மக்கள் சிக்கியுள்ள சூழலில், வானில் இருந்து உதவிகள் போடுவதை நிறுத்துமாறு நன்கொடை நாடுகளை ஹமாஸ் கேட்டுள்ளது. கடலில் விழுந்த இந்த உதவிப் பொதிகளை பெற முயன்ற 12 பலஸ்தீனர்கள் மூழ்கி உயிரிழந்ததை அடுத்து ஹமாஸ் இந்தக் கோரிக்கையை விடுத்தது.

உதவியைக் பெற முயன்ற மேலும் ஆறு பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்ததாக ஹமாஸ் மற்றும் சுவிஸை தளமாகக் கொண்ட மனித உரிமை கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளன.

'ஒரு டின் மீன் கலனை பெறுவதற்காக மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்' என்று காசா குடியிருப்பாளரான முஹமது அல் சபாவி ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார். உதவிப் பொதி ஒன்றில் இருந்து இவ்வாறான ஒரு கலனை பெற்று அதனை கையில் வைத்துக் கொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

காசாவுக்குள் மேலும் உதவி வாகனங்களை இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட ஹமாஸ், இது காசாவில் மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி வெடித்த காசா போரினால் அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட அனைத்து உட்கட்டமைப்புகளும் அழிக்கப்பட்ட நிலையில் அங்குள்ள 2.4 மில்லியன் மக்கள் தொகையில் அனைவருக்கும் மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக ஐ.நா கூறுகிறது.

விரைவான பஞ்சம் ஒன்றை தடுப்பதற்கு வான் அல்லது கடல் வழிகளை விடவும் வீதிகள் மூலம் காசாவுக்கு உதவிகள் விரைவாக எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்று ஐ.நா சிறுவர் அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது.

அவசியமான உதவிகள் ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே தங்கி உள்ளன. உதவிகளை நிரப்பிய லொறிகள் எகிப்துடனான காசாவின் தெற்கு எல்லையில் காத்துக் கிடக்கின்றன என்று யுனிசெப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் சுட்டிக்காட்டினார்.

உதவிகளை தரை வழியாக எடுத்துச் செல்ல தொடர்ந்து முயற்சிப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கௌன்சில், தொடர்ந்தும் வானில் இருந்து உதவிகளை போடுவதாக கூறியுள்ளது.

ஜோர்தான், எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஜெர்மனி நாடுகளில் அனுப்பப்பட்ட விமானங்களில் இருந்து பாராசூட் மூலம் வீசப்பட்ட உதவிப் பொதிகளை நோக்கி மக்கள் குவியும் காட்சியை ஏ.எப்.பி. தொலைகாட்சி வெளியிட்டுள்ளது.

காசாவில் இஸ்ரேல் தனது போர் நடவடிக்கையை விட்டுக்கொடுக்காது தொடர்ந்து செயற்பட்டு வருவதோடு கட்டாரில் இடம்பெற்று வரும் போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தையும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் நீடித்து வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் முன்னெப்போதும் அனுபவிக்காத அரசியல் தனிமைப்படுத்தலை எதிர்கொண்டிருப்பதாகவும் பாதுகாப்புச் சபையில் அமெரிக்காவின் பாதுகாப்பை இழந்திருப்பதாகவும் ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே குறிப்பட்டுள்ளார்.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலிய படை நேற்று நடத்திய சுற்றிவளைப்புகளில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. இதன்போது இஸ்ரேலின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதோடு மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக ஜெனின் நகரில் இஸ்ரேலிய படையின் துப்பாக்கிச் சூட்டில் 19 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் பதற்றம் நீடித்து வருகிறது.

மறுபுறம் வடக்கு இஸ்ரேல் மீது லெபனான் ஹிஸ்புல்லா அமைப்பு நடத்திய சரமாரி ரொக்கெட் தாக்குதல்களில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தெற்கு லெபனானில் கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதார மையம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஏழு மருத்துவ உதவியாளர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே ஹிஸ்புல்லா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்ஸீ

## நிதிக்கூற்று அறிக்கைகளின் பிரசுரம்

**2023 டிசம்பர் 31இல் முடிவடைந்த காலத்திற்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்பட்டது)**

| ரூபா மில்லியனில் | நடைமுறை காலம் 2023 | முன்னைய காலம் 2022 |
|---|---|---|
| | 01.01.2023 இலிருந்து 31.12.2023 வரை | 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரை |
| வட்டி வருமானம் | 1,234 | 1,580 |
| வட்டிச் செலவு | (545) | (798) |
| **தேறிய வட்டி வருமானம்** | **688** | **782** |
| ஏனைய வருமானம் | 181 | 208 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (641) | (557) |
| பெறுமதி இழப்பு | (115) | (17) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **113** | **416** |
| வரிகள்* | (32) | (177) |
| **ஆண்டிற்கான வருமானம்** | **81** | **239** |
| ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | **(5)** | **4** |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | **75** | **243** |

* நேரடியற்ற வரிகள் (நிதிச்சேவை மீதான பெ.சே.வ போன்ற) மற்றும் நேரடி வரிகள் (நிறுவன வருமான வரி) உள்ளடங்கலாக

| ரூபா மில்லியனில் | 31.12.2023இல் உள்ளவாறு | 31.12.2022இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 351 | 337 |
| அரச பிணையங்கள் | 2,115 | 1,178 |
| தொடர்புடைய தரப்பினரால் செலுத்த வேண்டியவை | - | - |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை நீங்கலாக) | 4,616 | 7,398 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 2 | 2 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 38 | 41 |
| ஏனைய சொத்துக்கள் | 316 | 276 |
| **மொத்த சொத்துக்கள்** | **7,439** | **9,232** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 1,634 | 3,193 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 1,371 | 1,771 |
| ஏனைய பொறுப்புக்கள் | 791 | 700 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **3,796** | **5,664** |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 200 | 200 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 181 | 177 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 3,260 | 3,189 |
| ஏனைய ஒதுக்குகள் | 2 | 2 |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **3,643** | **3,568** |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைப் பங்கு** | **7,439** | **9,232** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி** | **182.15** | **178.40** |

குறிப்பு: கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 31.12.2023இல் உள்ளவாறு | | 31.12.2022இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 47.34% | 8.50% | 36.53% | 8.50% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 47.34% | 12.50% | 36.53% | 12.50% |
| வைப்பு பொறுப்புகளுக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 254.64% | 10% | 201% | 10% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 24.43% | | 15.97% | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 10.21% | | 8.52% | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 15.16% | | 20.05% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 58.22% | | 71.06% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 9.00% | | 8.90% | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) | 1.36% | | 4.39% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பின்) | 2.24% | | 6.94% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 73.74% | | 56.27% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 1771% | | 800% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 86.84% | | 28.54% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 22 | | 22 | |
| சேவை நிலையங்களின் எண்ணிக்கை | 0 | | 0 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் (பிட்ச் தரப்படுத்தல்) | BBB (lka) | | BBB (lka) | |

**உறுதிப்படுத்தல்:**

ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் மற்றும் பினான்ஸ் பீஎல்ஸீ நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர்-நிதி மற்றும் இணக்கத் தலைவர் ஆகிய நாங்கள் இணைந்து மேல் குறிப்பிப்பட்டவை உண்மையானவை என்று கீழே கையொப்பமிட்டு உறுதிசெய்கின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

**சமத் முனசிங்க (ஒப்பம்)**
பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரி
திகதி: 27.03.2024

**நரேஷ் பெருமாள் (ஒப்பம்)**
பொது முகாமையாளர் - நிதி
திகதி: 27.03.2024

**பூர்ணிமா லெனோரா (ஒப்பம்)**
இணக்கத் தலைவர்
திகதி: 27.03.2024

### சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

AMW கெப்பிட்டல் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி எல் சி நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு

### நிதி அறிக்கைகளின் கணக்காய்வு அறிக்கை

**எங்கள் அபிப்பிராயம்**

நாங்கள் கணக்காய்வு செய்துள்ள AMW கெப்பிட்டல் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி எல் சி யின் ("நிறுவனம்"). நிதிநிலை அறிக்கையில் பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 31 டிசம்பர் 2023 இன் நிதி நிலை அறிக்கை
- முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான அறிக்கை
- முடிவடைந்த ஆண்டிற்கான பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை
- முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்கங்களின் அறிக்கை
- நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள், இதில் பொருள் கணக்கியல் கொள்கைகளின் சுருக்கமும் உள்ளடங்கும்.

எங்கள் கருத்துப்படி, அதனுடன் இணைக்கப்பட்டிருந்த நிதிநிலை அறிக்கைகள் 31 டிசம்பர் 2023 இல் நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் பணப்புழக்கங்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி முடிவடைந்த ஆண்டிற்கான உண்மையான மற்றும் நியாயமான நோக்கினை வழங்குகின்றன.

**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க நாங்கள் எங்கள் கணக்காய்வை மேற்கொண்டோம். எங்கள் அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகள் பிரிவின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள் எமது அறிக்கையின் நிதிக்கூற்றுகள் கணக்காய்வுக்கான கணக்காய்வாளர்களது பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

நாங்கள் பெற்ற கணக்காய்வு சான்றுகள் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**சுயாதீனம்**

இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவனம் ("CA ஸ்ரீலங்கா நெறிமுறைகள்") வழங்கிய தொழில்முறை கணக்காளர்களுக்கான நெறிமுறைகளின் கோட்பாட்டின்படி நாங்கள் நிறுவனத்தில் இருந்து சுயாதீனமாக இருக்கிறோம். CA ஸ்ரீலங்கா நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்க எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

**முக்கிய கணக்காய்வு விடயங்கள்**

முக்கிய கணக்காய்வு விடயங்கள், எங்கள் தொழில்முறை மதிப்பீட்டில், தற்போதைய காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த விடயங்கள் நிதிநிலை அறிக்கைகள் முழுவதுமாக எங்கள் தணிக்கையின் பின்னணியில் விவாதிக்கப்பட்டன, மேலும் எங்கள் கருத்தை உருவாக்கும் போது, இந்த விடயங்களில் நாங்கள்

| முக்கிய கணக்காய்வு விடயம் | முக்கிய கணக்காய்வு விடயத்தை எங்கள் கணக்காய்வு எவ்வாறு எடுத்துரைத்தது |
|---|---|
| குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் சொத்துக்களில் பெறத்தக்க கடன்கள் மற்றும் முற் பணங்கள் மற்றும் வாடகைகளின் குறைபாடு.<br><br>கணக்கியல் கொள்கை பிரிவு 2.2.2 ஐப் பார்க்கவும்:<br><br>கடன்கள் மற்றும் வரவுகள் மீதான குறைபாடு இழப்புகள் மற்றும் நிதிக்கான குறிப்புகள் 7, 8 மற்றும் 24 அறிக்கைகள்<br><br>31 டிசம்பர் 2023 நிலவரப்படி, குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் சொத்துக்களில் பெறத்தக்க கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வாடகைகளின் மொத்தத் தொகை ரூ. 5,373 மில்லியன், சேத இழப்பிற்கான மொத்த கொடுப்பனவு ரூ. 756 மில்லியன். மொத்த நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள் மொத்த சொத்துக்களில் 62% ஆகும்.<br><br>வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் கடன் அபாயம் மற்றும் குத்தகை மற்றும் வாடகைக்கு வாங்கும் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கணிசமாக அதிகரித்துள்ளனவா என்பதை நிர்வாகம் மதிப்பிடுகிறது. வெவ்வேறு பிரிவுகள், அதாவது மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், இரட்டை நோக்க நில வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்கள். ECL தனிப்பட்ட அடிப்படையில் அல்லது கூட்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. கூட்டுக் குறைபாடு என்பது இயல்புநிலையின் நிகழ்தகவு, கொடுக்கப்பட்ட இயல்புநிலை இழப்பு, இயல்புநிலையில் வெளிப்பாடு, காலத்திற்கான தள்ளுபடி காரணி மற்றும் பொருளாதார காரணி சரிசெய்தல் உள்ளிட்ட முக்கிய அளவுருக்களை உள்ளடக்கியதாக கணக்கிடப்படுகிறது.<br><br>தள்ளுபடி செய்யப்பட்ட பணப்புழக்கங்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட குறைபாடு தீர்மானிக்கப்படுகிறது.<br><br>ECL மாதிரியை பயன்படுத்தி குத்தகை மற்றும் வாடகைக்கு வாங்கும் சொத்துக்களில் பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் வாடகைகளின் குறைபாடுகள் முக்கிய தணிக்கை விஷயமாக கருதப்பட்டது.<br><br>- ECL மாதிரியில் பயன்படுத்தப்படும் முக்கிய மாதிரிகள் கொண்ட சிக்கலான கணக்கீடுகள் குறிப்பிடத்தக்க மேலாண்மை தீர்ப்பு மற்றும் அனுமானங்களின் பயன்பாடு தேவைப்படும்.<br><br>- குத்தகை மற்றும் வாடகைக்கு வாங்கும் சொத்துக்கள் மற்றும் அதன் குறைபாடு கொடுப்பனவுகள் ஆகியவற்றில் பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் வாடகைகளின் அளவுகள் மற்றும்<br>- நிச்சயமற்ற பொருளாதார சூழலில் ECL இன் நிர்ணயம் | ஏற்றுக்கொள்ளப்பட்ட SLFRS 9 க்கு இணங்க குத்தகை மற்றும் வாடகை கொள்முதல் சொத்துக்களில் பெறத்தக்க கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் வாடகைகள் மீதான கடன் இழப்புகளுக்கான குறைபாடு கொடுப்பனவின் போதுமான தன்மையை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தணிக்கை நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:<br><br>- கடன் மற்றும் கடன் இடர் குறைப்பு செயல்பாட்டில் முக்கிய கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டு செயல்திறனைப் புரிந்துகொள்வது, மதிப்பீடு செய்தல் மற்றும் சோதனை செய்தல்<br><br>வாடிக்கையாளரின் கடன் வசதிகள் பலவீனமாக உள்ளதா என்பதைத் தீர்மானிக்க நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் அளவுகோல்களின் (எ.கா.: கடந்த நாட்கள், தொழில் பிரிவுகள்) சரியான தன்மையை மதிப்பீடு செய்தல்<br><br>- ECL மாதிரி ஊடாக உள்ளீடுகளை பரிசீலிக்கப்பட்டனமேலும் கொடுகடன் சேத இழப்பிற்கான ஏற்பாடுகளில் கணிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன, முறையே நிர்வாகத்தால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க முடிவுகள் மற்றும் அனுமானங்களின் நியாயத்தன்மை, இதில் அடங்கும், பணப்புழக்க மதிப்பீடுகள், தள்ளுபடி விகிதங்கள், இயல்புநிலை ஏற்படும்போது எதிர்பார்க்கப்படும் மீட்புகள் மற்றும் மேலாண்மை மேலடுக்குகள்<br><br>- பொதுவில் கிடைக்கும் நம்பகமான தகவல்களுடன் ஒப்பிட்டு, நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் மேக்ரோ-பொருளாதார மற்றும் பிற முன்னோக்கு தகவல்களின் நியாயத்தன்மையை சரிபார்க்கிறது<br><br>துல்லியம் மற்றும் முழுமைக்கான மாதிரி அடிப்படையில் அடிப்படைக் கணக்கீடுகள் மற்றும் தரவைச் சரிபார்த்தல் மற்றும்<br><br>- தொடர்புடைய நிதிநிலை அறிக்கை வெளிப்பாடுகளின் துல்லியம் மற்றும் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல். |

**பிற தகவல்**

பிற தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும். பிற தகவல்கள் 31 டிசம்பர் 2023 ("ஆண்டு அறிக்கை") முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது (ஆனால் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையை உள்ளடக்கவில்லை). இந்த தணிக்கையாளரின் அறிக்கையின் திகதிக்குப் பிறகு வருடாந்திர அறிக்கை எங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து மற்ற தகவல்களை உள்ளடக்காது, மேலும் எந்த விதமான உறுதியான முடிவையும் நாங்கள் வெளிப்படுத்த மாட்டோம்.

நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் தணிக்கை தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் படிப்பதும், அவ்வாறு செய்யும்போது, மற்ற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகள் அல்லது தணிக்கையில் பெறப்பட்ட நமது அறிவுக்கு முரணாக உள்ளதா பொருள் தவறாகக் கூறப்பட்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எங்கள் பொறுப்பாகும்.

நாம் ஆண்டறிக்கையைப் படிக்கும்போது, அதில் தவறான அறிக்கை இருப்பதாக முடிவு செய்தால், நிர்வாகத்தின் ஆளுமைக்குப் பொறுப்பானவர்களிடம் அந்த விடயத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நிர்வாகத்தின் பொறுப்புகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளுக்கான நிர்வாக பொறுப்புகள்**

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதி அறிக்கைகளை மோசடிகள் அல்லது பிழைகளைத் தவிர்த்து தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிர்வாகம், நிறுவனத்தை கலைக்கவோ அல்லது நிறுத்தவோ விரும்பாத வரையில் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர யதார்த்தமான மாற்று இல்லை எனும் நிலை தோன்றும் வரையில் நடப்பு அக்கறையுடன் தொடரும் நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவது, அதற்கேற்ப பொருத்தமான வகையில் நடப்பது தொடர்பான விஷயங்களை வெளிப்படுத்துவது, கணக்கியலின் நடப்பு கவலை அடிப்படையைப் பயன்படுத்துவது போன்ற செயல்பாடுகள் ஆகியவை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிர்வாகத்தில் ஆளுமைக்குப் பொறுப்பானவர்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாவார்கள்

நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுகான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிநிலை அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதா, மோசடி அல்லது பிழை காரணமாக உள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் நிலை உத்தரவாதமாகும், ஆனால் SLAuSs க்கு இணங்க நடத்தப்படும் ஒரு தணிக்கையானது, அது இருக்கும் போது எப்போதும் தவறான அறிக்கையைக் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் அல்ல. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை நியாயமான முறையில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SLAuS களுக்கு இணங்க ஒரு கணக்காய்வின் ஒரு பகுதியாக, நாங்கள் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறோம் மற்றும் தொழில்முறை சந்தேகத்தை யும் பராமரிக்கிறோம்.

- மோசடி அல்லது பிழை காரணமாக, நிதிநிலை அறிக்கைகளின் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கைச் சான்றுகளைப் பெறுதல். மோசடி வேண்டுமென்றே புறக்கணிப்புகள், தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாக உள்ளது.
- சூழ்நிலைகளில் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைப்பதற்காக, தணிக்கை தொடர்பான உள் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுங்கள், ஆனால் நிறுவனத்தின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல என்பதை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்யவும்.
- கணக்கியலின் நடப்பு கவலையின் அடிப்படையில் நிர்வாகத்தின் பயன்பாட்டின் சரியான தன்மை மற்றும் பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதை முடிவு செய்யுங்கள். ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்றுவதற்கு எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும். எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனம் பற்றி தொடர்வதை நிறுத்தக்கூடும்
- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் வகையில் அடிப்படையான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யவும்.

கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் நேரம் மற்றும் குறிப்பிடத்தக்க தணிக்கை கண்டுபிடிப்புகள், எங்கள் கணக்காய்வின் போது நாங்கள் அடையாளம் காணும் உள் கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, ஆளுமைக்குப் பொறுப்பானவர்களுடன் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்.

ஆளுமைக்குப் பொறுப்பானவர்களுக்கு நாங்கள் சுதந்திரம் தொடர்பான நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்கிவிட்டோம் என்ற அறிக்கையை வழங்குகிறோம், மேலும் அவர்களுடன் தொடர்புகொள்வதற்கான அனைத்து உறவுகள் மற்றும் எங்கள் சுதந்திரத்தின் மீது நியாயமாக கருதக்கூடிய பிற விஷயங்களையும், பொருந்தக்கூடிய இடங்களில் தொடர்புடைய பாதுகாப்புகளையும் வழங்குகிறோம்.

ஆளுமைக்குப் பொறுப்பானவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்ட விஷயங்களில் இருந்து, நடப்பு காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை நாங்கள் தீர்மானிக்கிறோம், எனவே அவை முக்கிய தணிக்கை விஷயங்களாகும். இந்த விஷயத்தைப் பற்றிய பொது வெளிப்பாட்டை சட்டம் அல்லது ஒழுங்குமுறை தடுக்காத வரையில் அல்லது மிகவும் அரிதான சூழ்நிலைகளில், ஒரு விஷயத்தை எங்கள் அறிக்கையில் தெரிவிக்கக்கூடாது என்று நாங்கள் தீர்மானிக்கும் வரை எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் இந்த விஷயங்களை விவரிக்கிறோம், ஏனெனில் அவ்வாறு செய்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படும். அத்தகைய தகவல்தொடர்புகளின் பொது நலன்களை விட அதிகமாக இருக்கும்.

பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் படி, தணிக்கைக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம், மேலும் எங்கள் ஆய்வின் படி நிறுவனத்தால் முறையான கணக்கியல் பதிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பட்டய கணக்காளர்கள்
CA ஸ்ரீலங்கா உறுப்பினர் எண் 4084
கொழும்பு
27 மார்ச் 2024

இந்த கணக்கறிக்கை ஆங்கில கணக்கறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், இது Deloitte பட்டயக் கணக்காளர்களால் கையொப்பமிடப்பட்டது. மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளுக்கு இடையில் முரண்பாடு இருந்தால், ஆங்கில பதிப்பு எப்போதும் மேலோங்கும்.

HBL HABIB BANK ஹபீப் பேங்கை ஹபீப் வங்கி

# 2023 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கை

## 31.12.2023 காலத்திற்கான நிதியியல் நிலைமைக் கூற்று

| ரூபாய் ஆயிரங்களில் | வங்கி (கணக்காய்வுக்குட்பட்டது) ரூபா. | | குழு (கணக்காய்வுக்குட்பட்டது) பாக். ரூபா. | |
|---|---|---|---|---|
| | 31/12/2023 | 31/12/2022 | 31/12/2023 | 31/12/2022 |
| **சொத்து** | | | | |
| கையிலுள்ள காசு மற்றும் காசுக்கினையானவை | 2,650,978 | 2,706,590 | 328,537,645 | 177,041,873 |
| மத்திய வங்கியுடனான மீதி | 78,128 | 110,918 | 218,990,936 | 118,973,513 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 1,500,465 | 2,121,872 | 145,201,708 | 296,106,309 |
| பெறுதி நிதிச் சாதனங்கள் | 376 | 12,083 | 2,653,977 | 3,639,550 |
| மானிய விலையில் நிதிச் சொத்துக்கள் - முதலீடுகள் | 1,769,866 | 3,168,145 | 459,663,103 | 380,979,487 |
| மானிய விலையில் நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் முற்பணங்கள் | 3,433,847 | 5,070,000 | 1,861,344,592 | 1,782,497,923 |
| ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பில் கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 8,308,342 | 4,154,908 | 2,066,503,361 | 1,527,789,658 |
| பெறக்கூடிய வருமான வரி | - | - | - | - |
| துணை மற்றும் இனை நிறுவனங்களின் முதலீடு | | | 36,132,623 | 40,031,897 |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | 380,917 | 285,680 | 141,894,467 | 113,871,657 |
| நன்மதிப்பு மற்றும் அருவச்சொத்துக்கள் | | | 22,720,543 | 18,422,200 |
| ROU சொத்துக்கள் | 9,824 | 23,682 | | |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - | 480,874 | 5,797,045 |
| ஏனைய சொத்துக்கள் | 82,320 | 176,531 | 250,224,474 | 173,654,999 |
| **மொத்த சொத்துக்கள்** | **18,215,062** | **17,830,409** | **5,534,348,303** | **4,638,806,111** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கக்கு செலுத்த வேண்டியவை | 28,468 | 6,988 | - | - |
| பெறுதி நிதிச் சாதனங்கள் | - | - | - | - |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 9,529,646 | 10,234,860 | 4,142,351,836 | 3,469,342,252 |
| கடன்பாடுகள் | 250,191 | - | 665,042,679 | 583,771,399 |
| நடப்பு வரி பொறுப்புக்கள் | 283,597 | 244,412 | 14,721,663 | 13,362,266 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 62,037 | 21,830 | - | - |
| ஊழியர் நலன் பொறுப்புக்கள் | 47,487 | 41,312 | 7,244,757 | 6,689,292 |
| தாழ்த்தப்பட்டகடன்பாடுகள் | - | - | 19,699,000 | 18,874,000 |
| ஏணைய பொறுப்புக்கள் | 123,249 | 135,893 | 319,267,715 | 261,745,088 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **10,324,675** | **10,685,296** | **5,168,327,650** | **4,353,784,297** |
| **பங்கு மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம் | 4,938,390 | 4,938,390 | 14,668,525 | 14,668,525 |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 147,166 | 115,929 | 48,815,676 | 43,130,076 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 2,441,502 | 1,851,919 | 221,883,756 | 178,467,639 |
| ஏணைய ஒதுக்கங்கள் | 363,329 | 238,874 | 77,846,804 | 45,876,625 |
| பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | **7,890,387** | **7,145,113** | **363,214,761** | **282,142,865** |
| கட்டுப்படுத்தாத வட்டி | - | - | 2,805,892 | 2,878,949 |
| **மொத்த பங்கு மூலதனம்** | **7,890,387** | **7,145,113** | **366,020,653** | **285,021,814** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **18,215,062** | **17,830,409** | **5,534,348,303** | **4,638,806,111** |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்** | **7,018,591** | **7,634,794** | **1,253,534,402** | **1,228,617,584** |
| | | | - | - |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 58 | 61 | 20,301 | 21,632 |
| கிளைகளின் எண்ணிக்கை | 4 | 4 | 1,758 | 1,746 |

## 31.12.2023 முடிவடைந்த காலத்திற்கான பங்கு மாற்றங்களின் அறிக்கை

| வங்கி (கணக்காய்வுக்குட்பட்டது) | ஒதுக்கங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | முதலான ஒதுக்கம் | ஒதுக்கு நிதியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | ஏனைய ஒதுக்குகள் | மொத்தப் பங்கு மூலதனம் |
| **01/01/2023 அன்று மீதி (ஆரம்ப மீதி)** | - | 4,938,390 | 115,929 | 199,090 | 1,851,919 | 39,784 | 7,145,113 |
| **ஆண்டிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | - | 624,742 | - | 624,742 |
| ஏணைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (தேறிய வரி) | - | - | - | - | (3,923) | 68,946 | 65,023 |
| | | | | | | | - |
| **ஆண்டிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | - | - | - | - | **620,819** | **68,946** | **689,766** |
| **பங்கு மூலதனம் வைத்திருப்பவர்களுடன், நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்** | | | | | | | |
| மூலதன ஒதுக்கீட்டிலிருந்து பங்கு வழங்கல்/அதிகரிப்பு | - | - | - | - | - | - | - |
| பங்கு தேர்வுகள் | - | - | - | - | - | - | - |
| ஊதியம் வழங்கல் | - | - | - | - | - | - | - |
| உரிமம் வழங்கல் | - | - | - | - | - | - | - |
| மறுமதிப்பீட்டு ஆதாயம் (தேறிய வரி) | - | - | - | 55,508 | - | - | 55,508 |
| காலப்பகுதியில் ஒதுக்கீட்டு மாற்றியது | - | - | 31,237 | - | (31,237) | - | - |
| பங்கு வைத்திருப்போருக்கு பங்கிலாபம் | - | - | - | - | - | - | - |
| தலைமை அலுவலகத்திற்கு இலாபம் மாற்றியது | - | - | - | - | - | - | - |
| வருடத்திற்குள் இலாபம் மூலதனமாக்குதல் | - | - | - | - | - | - | - |
| **பங்கு வைத்திருப்பவர்களுடன் மொத்த வனிக நடவடிக்கை** | - | - | **31,237** | **55,508** | **(31,237)** | - | **55,508** |
| **31/12/2023 அன்று மீதி (இறுதி மீதி)** | | **4,938,390** | **147,166** | **254,598** | **2,441,502** | **108,731** | **7,890,387** |

## 31.12.2023 முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மாற்றங்களின் அறிக்கை

| குழு (கணக்காய்வுக்குட்பட்டது) | வங்கி பங்குதாரர்களுக்கான காரணி | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | ஒதுக்கங்கள் | | | | | சட்டரீதியான மறுமதிப்பீட்டில் உபரி / (பற்றாக்குறை) | | | கட்டுபடுத்த முடியாத வட்டி | மொத்தப் பங்கு மூலதனம் |
| | | சட்டரீதியானவை | | முதலான ஒதுக்கம் | | | | | | | |
| | | கூட்டு முயற்சி மற்றும் துணை நிறுவனம் | ஒதுக்கு நிதியம் | பரிமாற்றம் பொழி பெயர்ப்பு | விற்பனைக்கு முடியாதவை | பொதுவான கட்டுப்பாட்டு நிறுவனத்தை கையகப்படுத்தல் | முதலீடுகள் | நிலையான/ வகியல்லா சொத்துக்கள் | பொருத்தமற்ற இலாபம் | கூட்டுத் தொகை | |
| **01/01/2023 அன்று மீதி (ஆரம்ப மீதி)** | **14,668,525** | **2,523,824** | **43,130,076** | **41,727,023** | **547,115** | **(156,706)** | **(26,064,591)** | **27,299,960** | **178,467,639** | **282,142,865** | **2,878,949** | **285,021,814** |
| **காலப்பகுதிக்கான அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | - | - | - | - | - | 57,676,040 | 57,676,040 | 81,376 | 57,757,416 |
| ஏணைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (தேறிய வரி) | - | - | - | 10,529,694 | - | - | 8,786,734 | 15,993,295 | 442,658 | 35,752,381 | 75,290 | 35,827,671 |
| **காலப்பகுதிக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | **14,668,525** | **2,523,824** | **43,130,076** | **52,256,717** | **547,115** | **(156,706)** | **(17,277,857)** | **43,293,255** | **236,586,337** | **375,571,286** | **3,035,615** | **378,606,901** |
| **பங்கு மூலதனம் வைத்திருப்வர்களுடன், நேரடியாக அங்கீகரிக்கப்ட்ட பங்கு மூலதனம்** | | | | | | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கீட்டு மாற்றியது | - | 214,354 | 5,685,600 | - | - | - | - | - | (5,899,954) | - | - | - |
| நிலையான சொத்துக்களின் மறுமதிப்பீட்டு மிகையிலிருந்து மாற்றம் - தேறியது | - | - | - | - | - | - | - | (156,366) | 156,366 | - | - | - |
| பங்கு வைத்திருப்போருக்கு பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | (10,634,681) | (10,634,681) | - | (10,634,681) |
| கலைப்புக்கு உட்பட்ட துணை நிறுவனத்தில் மூலதனக் குறைப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| குறித்து பரிமாற்ற ஆதாயம் உணரப்பட்டது - தேறிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கிளை மூலதனத்தின் பகுதியளவு திருப்பி அனுப்பப்பட்டதில் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உணரப்பட்ட பரிவர்த்தனை ஆதாயம் - தேறிய வரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| துணை நிறுவனத்தில் பெற்ற கூடுதல் வட்டி | - | - | - | - | - | - | (7,097) | 2,395 | 234,425 | 229,723 | (229,723) | - |
| அங்கீகரிக்ப்படாத கூட்டு முயற்சி | - | (1,444,256) | - | (1,951,567) | - | - | 2,993 | - | 1,441,263 | (1,951,567) | - | (1,951,567) |
| துணை நிறுவனங்களின் நிலையான சொத்துக்களை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மறுமதிப்பீடு உபரியின் சிறுபான்மை பங்கு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **பங்கு வைத்திருப்வர்களுடன் மொத்த வனிக நடவடிக்கை** | - | **(1,229,902)** | **5,685,600** | **(1,951,567)** | - | - | **(4,104)** | **(153,971)** | **(14,702,581)** | **(12,356,525)** | **(229,723)** | **(12,586,248)** |
| **31/12/2023 அன்று மீதி (இறுதி மீதி)** | **14,668,525** | **1,293,922** | **48,815,676** | **50,305,150** | **547,115** | **(156,706)** | **(17,281,961)** | **43,139,284** | **221,883,756** | **363,214,761** | **2,805,892** | **366,020,653** |

## 31.12.2023 முடிவடைந்த வருடத்திற்கான வருமாணக்கூற்று

| ரூபாய் ஆயிரங்களில் | வங்கி (கணக்காய்வுக்குட்பட்டது) ரூபா. | | குழு (கணக்காய்வுக்குட்பட்டது) பாக். ரூபா. | |
|---|---|---|---|---|
| | 31/12/2023 | 31/12/2022 | 31/12/2023 | 31/12/2022 |
| வட்டி வருமானம் | 2,457,181 | 1,579,272 | 712,345,078 | 436,101,037 |
| வட்டிச் செலவினங்கள் | 661,123 | 341,874 | 470,212,037 | 270,538,340 |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,796,058** | **1,237,398** | **242,133,041** | **165,562,697** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 72,581 | 79,257 | 42,250,183 | 31,510,143 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | - | - | - | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **72,581** | **79,257** | **42,250,183** | **31,510,143** |
| வர்த்தகத்தின் மூலம் தேறிய இலபாம்/(நட்டம்) | - | - | 945,981 | 866,175 |
| நிதியியல் சாதனங்களின் தேறிய நியாய மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| அங்கீகரிக்கப்படாத நிதிச் சொத்துக்களின் மீது தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 135,328 | 541,340 | 14,254,941 | 14,355,419 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **135,328** | **541,340** | **15,200,922** | **15,221,594** |
| சேதத்தின் மூலம் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | (66,744) | (111,250) | 13,265,779 | 8,481,761 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **1,937,224** | **1,746,744** | **286,318,367** | **203,812,673** |
| தனிப்பட்ட செலவீனங்கள் | 372,953 | 318,855 | 63,513,263 | 51,242,703 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | 26,152 | 24,193 | 16,354,003 | 13,612,998 |
| ஏனைய செலவினங்கள் | 172,049 | 140,321 | 92,900,105 | 61,927,034 |
| **பெறுமதிகூட்டப்பட்ட வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **1,366,070** | **1,263,375** | **113,550,996** | **77,029,938** |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதிகூட்டப்பட்ட வரி | 309,114 | 260,029 | - | - |
| நிதியியல் பணிகள் மீதான தேசிய கட்டிட வரி (NBT) | - | - | - | - |
| **வரிக்குமுன் இலாபம்/(நட்டம்)** | **1,056,957** | **1,003,346** | **113,550,996** | **77,029,938** |
| வரிச் செலவீனங்கள் | 432,214 | 389,275 | 55,793,580 | 42,631,608 |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | **624,742** | **614,071** | **57,757,416** | **34,398,330** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 624,742 | 614,071 | 57,676,040 | 34,070,087 |
| கட்டுப்படுத்தாத வட்டிகள் | - | - | 81,376 | 328,243 |
| **இலாபத்தின் மீதான பங்கு இலாபம்** | | | | |
| சாதாரண பங்கிற்கான அடிப்படை இலாபம் | - | - | 39.32 | 23.23 |
| சாதாரண பங்கு நீர்த்த வருவாய் | - | - | 39.32 | 23.23 |

## 31.12.2023 முடிவடைந்த காலத்திற்கான சீராக்கப்பட்ட வருமாணக்கூற்று

| ரூபாய் ஆயிரங்களில் | வங்கி (கணக்காய்வுக்குட்பட்டது) இலங்கை. ரூபா. | | குழு (கணக்காய்வுக்குட்பட்டது) பாக். ரூபா. | |
|---|---|---|---|---|
| | 31/12/2023 | 31/12/2022 | 31/12/2023 | 31/12/2022 |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | 624,742 | 614,071 | 57,757,416 | 34,398,330 |
| ஏனைய விரிவான வருமானம், தேறிய வட்டி | - | - | | |
| வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்திற்கான காப்புறுதி கணிப்பீட்டின் இலாபம் மற்றும் நட்டம் | (5,604) | 4,066 | 438,637 | 79,834 |
| இலாபம் மற்றும் நட்டம் (வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான நிதி அறிக்கைகளில் எழும் மொழிபெய்ப்பு) | - | - | 10,529,694 | 2,302,352 |
| வெளிநாட்டு நாணய மூலதனம் மற்றும் ஒதுக்கீடுக்கான மொழிபெயர்ப்பு பரிமாற்று வித்தியாசங்கள் | (5,335) | 22,147 | - | - |
| மூலதனத்தின் பரிமாற்ற சமன்பாட்டின் உணர்தல் | - | - | | |
| நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீடு ஆதாயம் | 77,548 | - | - | - |
| வருமான வரி கூறுகள் தொடர்பான ஏனைய விரிவான வருமானம் | (52,193) | 2,390 | - | - |
| முதலீடுகளின் மறுமதிப்பீட்டின் மீது உமி பங்கு/ இணைக கம்பனிகளின் இயங்கும் நிலையான சொத்துக்கள் | - | - | 16,051,791 | (48,332) |
| சொத்துக்கள் மறுமதிப்பீட்டின் மீது இலாபம்/(நட்டம்) | 106,116 | (30,975) | 8,807,549 | (23,812,780) |
| நிலையான சொத்துக்களின் மறுமதிப்பீட்டில் பற்றாக்குறை | - | - | - | - |
| **காலப்பகுதிக்கான தேறிய வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **120,532** | **(2,372)** | **35,827,671** | **(21,478,926)** |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் பகிர்தளிக்கப்பட்டது.** | **745,274** | **611,700** | **93,585,087** | **12,919,404** |
| **பகிர்தளிக்கப்படுவதற்கு:** | | | | |
| தலைமை கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 745,274 | 611,700 | 93,428,421 | 12,628,107 |
| கட்டுப்பாடற்ற வட்டி | - | - | 156,666 | 291,297 |

## 31.12.2023 முடிவடைந்த காலத்திற்கான காசு காய்ச்சல் கூற்று

| விபரம் | வங்கி (கணக்காய்வுக்குட்பட்டது) | | குழு (கணக்காய்வுக்குட்பட்டது) | |
|---|---|---|---|---|
| | 2023 ரூபா. | 2022 ரூபா. | 2023 பாக். ரூபா. | 2022 பாக். ரூபா. |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டிக்கு முன் இலாபம் | 1,056,957 | 1,003,346 | 113,550,996 | 77,029,938 |
| சொத்து, ஆலை மற்றும் உபகரண சேதத்துக்கான (இலாபம்)/நட்டம் | (127) | (1,350) | (48,681) | (42,024) |
| துணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்கிலாபம் | - | - | (4,422,695) | (3,028,453) |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவு | 26,152 | 24,193 | 16,354,003 | 13,612,998 |
| நன்கொடை வழங்கல் | 11,492 | 8,259 | | |
| கட்டணம் மற்றும் தரகு சேதக் கட்டணம் | 66,744 | 111,250 | 13,469,201 | 5,943,661 |
| வட்டி பெறுகை அதிகரிப்பு/(குறைப்பு) | - | - | - | - |
| செலுத்திய வட்டி அதிகரிப்பு/(குறைப்பு) | - | - | - | - |
| சேர்ந்த செலவு அதிகரிப்பு/(குறைப்பு) | - | - | - | - |
| நிதிசாராத வசதிகள் மற்றும் முதலீடுகளுக்கான குறைப்பாடு கட்டணம் | - | - | 766,504 | (622,951) |
| நன்கொடை கொடுப்பனவு செலுத்தியது | (10,922) | (6,850) | | |
| ஏனைய பணமல்லாதவை | 12,546 | (32,945) | 7,627,375 | 5,037,045 |
| பெற்ற பங்கிலாபம் | (1,916) | (2,293) | (2,300,969) | (1,508,643) |
| தேறிய துணை கடன்/நன்மதிப்புக்கான செலாவணி இழப்பு | - | - | (1,055,507) | (429,394) |
| முதலீட்டின் மூலம் மதிப்பின் ரத்து செய்வதற்கெதிரா குறைப்பு | - | - | (184,104) | 3,851,708 |
| அங்கீகரிக்கப்படாத கூட்டு முயற்சியின் ஆதாயம் | - | - | (3,731,399) | - |
| தொழிலாளர் நலநிதி | - | - | 2,282,323 | 1,498,693 |
| **தொழிற்பாட்டுச் சொத்துக்கள், பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **1,160,925** | **1,103,612** | **142,307,047** | **101,342,578** |
| **தொழிற்பாட்டுச் சொத்து/பொறுப்புக்களின் அதிகரிப்பு /குறைப்பு** | | | | |
| தொழிற்பாட்டுச் சொத்து அதிகரிப்பு /குறைப்பு | (410,920) | (1,987,638) | (188,928,229) | (330,799,956) |
| தொழிற்பாட்டுச் பொறுப்புக்களின் அதிகரிப்பு /குறைப்பு | (431,381) | 3,379,370 | 809,502,347 | 310,659,232 |
| **வருமானவரிக்கு முன்னரான தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு** | **(842,301)** | **1,391,732** | **620,574,118** | **(20,140,724)** |
| (செலுத்திய)/திரும்பிய வருமாண வரி | (402,864) | (221,136) | (51,150,860) | (32,102,961) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு** | **(84,240)** | **2,274,208** | **711,730,305** | **49,098,893** |
| **முதலீட்டுத் தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் பெற்ற காசுப்பாய்ச்சல்** | | | | |
| பெற்ற பங்கிலாபம் | 1,916 | 2,293 | 2,295,759 | 1,689,973 |
| சொத்து மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (30,032) | (15,213) | (22,598,865) | (27,108,397) |
| சொத்து மற்றும் உபகரணங்கள் விற்பனையின் மூலம் இலாபம் | 176 | 1,350 | 281,697 | 65,071 |
| கொள்வனவு செய்யப்பட்ட நிதி முதலீட்டின் மூலம் தேறிய காசு பாய்ச்சல் | - | - | (413,680,517) | (182,610,109) |
| வணிக இணைப்பில் தேறிய காசுப் பாய்ச்சல் | - | - | - | - |
